விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 21 சனிக்கிழமை (04.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது

## அமெரிக்கா தெரிவிப்பு



(வாஷிங்டன்)

2009 போருக்கு பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. போருக்கு பின்னரான 5 வருடங்களில் அந்த நல்லிணக்கத்தை அரசாங்கத்தினால் எட்ட முடியவில்லை. எனினும் அந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு புதிய அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது என்று அமெரிக்காவின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகளுக்கான உதவிச் செயலாளர் டொம் மாலினொவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

## நல்லிணக்கம் இல்லாவிட்டால் அரசின் முயற்சி தோல்வியடையும்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாவிட்டால் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் தோல்வியடையும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் உருவாக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி செயலணியை தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிரந்தர அலுவலகமாக மாற்றவுள்ளோம்.

கடந்த அரசாங்கம் இந்தியாவுடனான உறவுகளை முற்றாக சீர்குலைத்துள்ளதை தொடர்ந்து அதனை

24ஆம் பக்கம் பார்க்க

## சீன உறவில் மாற்றமில்லை அரசாங்கம் உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் தற்போது காணப்படும் உறவில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர கபீர் ஹாசீம் மற்றும் இலங்கைக்கான பதில் சீன தூதுவர் ரென் பெக்கியங் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போதே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் எவ்வித பாதிப்புக்களும் மாற்றங்களும் ஏற்படாது என அமைச்சர் கபீர் ஹாசீம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் சீனா மேற்கொண்டுள்ள சகல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு செய்யப்படும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இந்த திட்டங்களை வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-11)

## நாடாளுமன்றம் மே 5இல் கலைப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைப்பார் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் முறையில் மாற்றம் செய்ய முடியாது போனாலும் ஜனாதிபதி கட்டாயம் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் அறிவிப்பை வெளியிடுவார் என அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் எதிர்வரும் 9-ம் மற்றும் 10-ம் திகதிகளில் நாடாளுமன்ற

24ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சுப் பதவிகளுக்காக தேசிய அரசாங்கம் இல்லை

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

'தேசிய அரசாங்கம் என்பது அமைச்சு பதவிகளை பகிர்ந்து கொள்வதல்ல என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒரு நிலைப்பாட்டில் செயற்படுவது தேசிய அரசாங்கத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர்கள் இருவர் இராஜினாமா?

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்ட இருவர் தமது பதவிகளை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவபடுத்தி அமைச்சு பதவிகள் பெற்றுக் கொண்டவர்களே இவ்வாறு இராஜினாமா செய்யவுள்ளனர்.

இராஜினாமா தொடர்பில் ஸ்ரீ

24ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி நாளை பாக்.விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை 5 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள

24ஆம் பக்கம் பார்க்க

## புலிகளிடம் மீட்ட ஆயுதங்கள் தீவிரவாதிகளுக்கு விற்பனை

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் போகோ ஹராம் மற்றும் உக்ரேன் தீவிரவாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதோடு இது தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை நடத்தி வருவதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நடுக்கடலில் இடம்பெற்ற ஆயுத விற்பனை தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

24ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகள் விற்பனையில் 10 கோடி ரூபாய் நட்டம்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய திறைசேரி முறிகள் விநியோகத்தினால் அரசாங்கத்திற்கு 10 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கி மீதான இரண்டாவது தாக்குதல் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திறைசேரி முறிகள் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விமர்சிக்கும் வகையிலான கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த பந்துல குணவர்தன, பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் 4 வாரங்கள் கடந்துள்ள நிலையில், 41 பில்லியன் வட்டியை நட்டமாகத் தாங்க வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டார்.

அத்துடன், காலி - மாத்தறை அதிவேக வீதியை முழு அளவில் பூர்த்தி செய்வதற்கு 25 பில்லியனே செலவானது எனவும் மேல் கொத்மலை நீர்மின் நிலையத்திற்கு 23 பில்லியனே செலவானது எனவும் ஹெஜிங் ஒப்பந்தத்தில் 12 பில்லியனே நட்டமாக உத்தேசிக்கப்பட்டது எனவும் குறிப்பிட்ட அவர், 4 வாரத்தில் இங்கு 41 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டினார். (எ-11)

# தமிழக மீனவர்கள் 33 பேர் கைது

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்த 33 தமிழக மீனவர்களை கடற்படையினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 33 மீனவர்கள் 5 படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது 5 படகுகளையும் கடற்படையினர் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். (எ-11)

# அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையில் சில மாற்றங்களைக் கொண்டுவர பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

பயோ மெற்றிக் முறையிலான தேசிய அடையாள அட்டை ஒன்று அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான யோசனைத் திட்டமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை குறித்து விசேட வர்த்தமானி அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட உள்ளது. ஆட்பதிவு சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-11)


## தூரிகை பியூட்டி பார்லர்



ஏப்ரல் 1 முதல் 30 வரை
பேஷியல் செய்து கொள்வதற்குரிய கட்டணங்கள் பின்வருமாறு குறைப்புச் செய்யப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| கிளீன் அப் .............. | ~~500/-~~ | 400/- |
| சாதாரண பேஷியல் .. | ~~1000/-~~ | 750/- |
| பப்பாயா பேஷியல் .... | ~~1500/-~~ | 1200/- |
| ஃபுரூட் பேஷியல் ..... | ~~1500/-~~ | 1300/- |
| ஃபுரூட் பேஷியல் ..... | ~~2000/-~~ | 1600/- |
| சஃப்றோன் பேஷியல் .. | ~~1500/-~~ | 1300/- |
| பிம்பிள் பேஷியல் ....... | ~~2000/-~~ | 1500/- |
| பேர்ள் பேஷியல் ......... | ~~2000/-~~ | 1750/- |
| கோல்ட் பேஷியல் ......... | ~~2500/-~~ | 2000/- |

(C-557)

இவ் ஏப்ரல் மாதத்தில் பேஷியல் செய்து கொள்வோர்க்கு இந்த வருடம் முழுவதும் மேற்படி கட்டணமே அறவிடப்படும்.

வாரத்தில் 7 நாட்களும் பார்லர் திறந்திருக்கும்

தூரிகை - மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி



## நல்லூர் அரசடி

### ஜனசக்தி சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின்

(வளர்ச்சி நிதிக்காக)

யாழ் மாவட்ட தாட்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட தாட்சி சுற்றுப்போட்டி - 2015

**04.04.2015 இன்று மாலை 7.30 மணிக்கு மூன்றாம் இடத்திற்கான போட்டிகள் வைகறை எதிர் வள்ளுவர்**

காலம் :- 05.04.2015 ஞாயிற்றுக்கிழமை
இடம் :- உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானம்
நேரம் :- மாலை 3.30 மணி

**இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் கழகங்கள்**

கண்ணகி விளையாட்டுக் கழகம் (மயிலிட்டி) எதிர் காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் (கொக்குவில்)

நிகழ்ச்சி நிரல்

தலைமையுரை :- திரு.து.யோகராசா அவர்கள் (ஜனசக்திசனசமூக நிலையத்தலைவர்)
வரவேற்புரை :- திரு.வ.தம்பித்துரை அவர்கள்(ஜனசக்தி சனசமூக நிலையச்செயலாளர்)
பிரதம விருந்தினர் :- திரு.இ.ஆனோட் அவர்கள் (மாகாண சபை உறுப்பினர்) (விளையாட்டுத் துறை இணைப்பாளர்)
கௌரவ விருந்தினர் :- திரு.அ.கிருபாகரன் அவர்கள் (உரிமையாளர் கிருபா லேணர்ஸ்.யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர் :- திரு.யூயிற் மசனன் (கிராம சேவையாளர் J/196 சுன்னாகம்)
நன்றியுரை :- திரு.து.ரவியழகன் அவர்கள் (ஜனசக்தி சனசமூக நிலைய விளையாட்டுப் பொறுப்பாளர்)

(3378)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜனசக்தி சனசமூக நிலையம், அரசடி வீதி,நல்லூர்.



## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு அண்மையில சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 0718513913 (இ)



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுனர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

02.04.2015 முதல் 08.04.2015 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-555)



## முதலாமாண்டு நினைவலையில்



### அமரர் இராசதுரை மரியதாஸ்

நினைந்தும் நனையட்டும்
ஈரப்பட்டியம்பும் - உம்
இயன் சுவை மிகு அன்பு ...
வீழ்ந்தாழ் வீரமூட்டும் - உம்
அன்பு மறைந்து
ஓராண்டும் கரைந்தும்
நனைந்தும் நனையட்டும்....

05.04.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவிருக்கும் 1-ம் ஆண்டு நினைவு நிகழ்வில் பங்கெடுத்து எம்மோடு கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு. (C-556)

தகவல் : குடும்பத்தினர், பிள்ளைகள்.



## டிஸ் அன்ரனா பொருத்துனர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் எமது நிறுவனத்திற்கு DISH ANTENNA பொருத்துனர் உடன்தேவை. அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப 50,000/= வரை கிடைக்கும் உணவு, தங்குமிடம் உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். (9988)

குமார் :- 0777 710 785



## விசேட கருத்தரங்குகள்

இம் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கு

**வடமாகாண வருமானப் பரிசோதகர்**

சனி (இன்று) காலை 10.00 மணிக்கு
வியாழன் (9/4), வெள்ளி (10/4)
காலை 9.00 - 3.00 மணிவரை

**அரச முகாமைத்துவ உதவியாளர்**

சனி (இன்று) பி.ப. 1.00 மணி
ஞாயிறு (12/4), வெள்ளி (17/4)
சனி (18/4) காலை 9.00 - 3.00

(9989)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

இப்பரீட்சைக்கான வகுப்புக்கள் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளிலும் நடைபெறவுள்ளன.
T.P:0766883394 இப்பரீட்சைகளுக்காக திரு. தவசேகரின வழிகாட்டி நூல்களை வகுப்பிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.





மிக குறுகிய காலத்தில் யாழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற ஷைலோ ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் ஆகிய நாம் சுத்தமான, சுவையான, ஆரோக்கியமான, இயற்கையான ஊட்டங்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் SYLO ICE CREAM விற்பனை நிலையத்தை யாழ் நகர் பஸ் நிலையம் முன்புறம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

## ஷைலோ ஐஸ் கிறீம்

Sylo Natural Ice Cream

இல. 442, ஆஸ்பத்திரி வீதி, (சைக்கிள் பார்க் எதிரில்), யாழ்ப்பாணம்.

T.P :- 021 221 7885

(9988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற மோதலில் பொலிஸாருக்கு காயங்கள் ஏற்படவில்லை!

**கொள்ளுப்பிட்டியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முனனர் இடம்பெற்ற மோதல்க ளில் பொலிஸார் எவரும் காயமடைய வில்லை என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

தமது கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்க ழக மாணவர்கள் நடத்திய பேரணி கொள்ளுப்பிட்டியை அடைந்தபோது மோதல் ஏற் பட்டது. இதன்போது மாண வர்களும் பொலிஸாரும் காயமடைந்ததாக இலங்கை அர சாங்கம் அறிவித்திருந்தது.

எனினும்இதனைஅனைத்து பல்கலைக்கழக மாண வர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட் டாளர் நஜித் இந்திக்க நிரா கரித்துள்ளார். அனுதா பத்தை தேடிக்கொ ள்ளவே இந்த செய்தி வெளி யிடப்பட்டுள்ளதாக இந்திக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பிரதமர் காரியாலயம் கூறுவதைப் போன்று பிரதமர் அலுவல கத்துடன் பேச்சுவார்த்தைக் கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என் றும் தெரிவித்தார். (இ-5)

## ரணிலின் பதவிக்கு தானே காரணமாம்

ரணில் விக்ரமசிங்க இன்று பிரதமராக பதவி வகிக்க தாமே காரணம் என ஐக்கிய மக கள் சுதந்திரக்கூட்டமைப்பின்கொழும்பு மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான லிலந்த பெரேரா தெரிவித் துள்ளார். ரணில் விக்ரமசிங்கவை கட்சியிலிரு ந்து வெளியேற்ற முயற்சிக்கப்பட்டது. நானே அந்த சூழ்ச்சித் திட்டம் குறித்து அறிவித்தேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் ரணில் விக்ரமசிங்க இரண்டு தடவை கள் பிரதமராக பதவி வகித்தமை என்னால் தான். தற்போதைய நிதி அமைச்சர் ரவி கரு ணாநாயக்கவின் வீட்டில், காமினி அத்து கோரள தலைமையிலான குழுவினர் ரணிலை எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலி ருந்து நீக்க சூழ்ச்சித் திட்டம் தீட்டினர்.

அந்தக் கூட்டத்தில் பங் கேற்ற நான், அந்த சம்பாச ணைகளை தொலைபேசி ஊடாக ரணில் கேட்பதற்கு ஏற்பாடு செயதேன். இதன் கார ணமாகவே அந்த சூழ்சசித் தட்டத்தை ரணில் முறியடித்தார். ரணில் விக்ரமசங்க பிரதமராக பதவி வகிபபது சந் தோசத்தை தருகின் றது. நாடாளுமன்றில் ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சித் தலை வராக பதவி வகிக்க கூடாது என முயற்சி க்கப்பட்டது. இந்முய ற்சி குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ரணிலின் மனைவி மைத்திரி போன்றவ ர்களுக்குத் தெரியும் என லிலந்த பெரேரா சிங்களப் பத் திரிகை யொன்றுக்கு தெரிவித் துள்ளார். (இ-5)


அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

### வித்தகம்



இடம்:- கம்பன் கோட்டம் நல்லூர்
காலம்:- 04.04.2015 சனிக்கிழமை
நேரம்:- மாலை 5.30 மணி

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
திரு. சி.குமரவேல்
(தலைவர், பரிபாலனசபை ஐயனார் தேவஸ்தானம், சுன்னாகம்)

கடவுள் வாழ்த்து
திரு.வே.ஞானசம்பந்தன்
(விரிவுரையாளர்- வவுனியா கல்வியியற் கல்லூரி)

வரவேற்புரை
திரு. லோ.துஷிகரன்

தலைமையுரை
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
(ஓய்வு நிலைப் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்)

சிந்தனையரங்கு

நடுவர்: கம்புவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்
விடயம்:"திருத்தொண்டர் புராணத்தில் தேவார முதலிகள்"
ஞான போதகர்- கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
வள்ளல் வாகீசர்- திரு. ந. விஜயசுந்தரம்
தம்பிரான் தோழர்- தமிழருவி த.சிவகுமாரன்

"கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்"
அகில இலங்கைக் கம்பன் கழகம்.



### தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு

நாற்று உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட 40 வருடத்திற்கு மேலான தாய்த் தென்னம்பிள்ளைகளிலிருந்து பெறப்பட்ட விதை நாற்றுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தரமான தென்னை நாற்றுக்கள் எம்மிடம் விற்ப னைக்கு உண்டு.

**தென்னை நாற்று ஒன்றின் விலை ரூபா- 120/-**

பெற விரும்புபவர்கள் உடன் முற்பதிவுகளை மேற்கொண்டு கீழ்க்காண் முகவரிக்கு வந்து பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி:-
தி.இராசநாயகம், தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல. 077 060 4950, 021 492 3118



உ
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை

### இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்

13ம் ஆண்டு நிறைவு விழாவும்
பரிசில் வழங்கல் வைபவமும் – 2015

இடம் : இணுவில் பொது நூலக கலாசார மண்டபம்
காலம் : 04.04.2015 சனிக்கிழமை, பி.ப 3.00 மணி

தலைவர்
திரு.ச.சிவசங்கர் (இ.பொ.நூ)

பரதம விருந்தினர்
திரு.ச.கைலாசநாதன்
உதவிக்கல்விப்பணிப்பாளர்
முறைசாராக் கல்வி. மாகாணக்கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

சிறப்பு விருந்தினர்
திரு.க.சுந்தரலிங்கம்
ஓய்வு பெற்ற அதிபர் – யா/சுதுமலை செல்லத்துரை வித்தியாலயம்
திரு.க.தில்லைநாதன் (ஜே.பி) - ஓய்வு பெற்ற உப அதிபர்

கௌரவ விருந்தினர்கள்
திரு.ஐ.சொர்ணலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர். இணுவில்)
திரு.இ.குமாரலிங்கம் (இணுவில்)
திரு.செ.குணராஜா (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர் இணுவில்)
திரு.யோ.சசிகரன் (இலண்டன்)

தொடக்கவுரை : பேராசிரியர் க.தேவராஜா (போசகர். இ.பொ.நூ தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.
பரிசில் வழங்கல் : கணினிப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இணுவில்
இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்



### எட்டாம் நாளில் நெஞ்சுருகி நிற்கின்றோம்

அன்புடன் 16.05.1931
பிரிவுடன் 28.03.2015



ம.அன்பு
உரிமையாளர் சாள்ஸ் மீசாலை
(மேடை அமைப்பு, மேடை அலங்காரம், ஒப்பனை அலங்காரம், ஒலி ஒளி)

தந்தையே !
எமக்காக நீங்கள் செய்த வேண்டுதல்கள்,
திருப்பலிகள் எல்லாவற்றிற்கும் நன்றி கூறி... (9946)

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்

சாள்ஸ் : பங்களா வீதி மீசாலை.
077 959 1101
077 747 0832
– குடும்பத்தினர்


## இராசி பலன்

04.04.2015
(பங்குனி 21, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
பூரணை மாலை 5.59 மணிவரை
அத்தம் முன்னிரவு 11.47 மணிவரை
இராகுகாலம் 9.10-10-40 மணிவரை
சுபநேரம் 3.10-4.40 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூ லிக்க எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், நல்லவர்களின் அறிவுரை யும் ஆதரவும் கிடைக்கும், குடும் பத்தில் குதூகலம் ஏற்படும்.

**இடபம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்று வீர்கள், பூர்வீகச் சொத்துக்க ளால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்ப ங்கள் கூடும் நாள், தொலை பேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்க ளின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சி னையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக் கும், பேச்சில் இனிமை தென்ப டும், ஆடம்பரப்பொருட்கள் வாங் குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர் சந்திப்புண்டு, இறை வழிபாட்டால் இன்பம் கூடும்.

**கன்னி:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதி யான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவுகள் செய்து மகி ழ்வீர்கள், கூட்டாளிகளுடன் கொஞ் சம் கூடுதல் கவனம் தேவை, மாற் றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், சகோதர ஒற்றுமை மேலோ ங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.

**தனுசு:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், எடுத்த காரிய ங்களை முடிப்பதில் அதிக பிர யாசை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ் வீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** தேக நலனில் ஏற்பட்ட பாதிப் புக்கள் குறையும், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறு வர், நண்பர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** துயர்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள் குடும்பத்தினரிடம் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது கௌரவக் குறைவான சம்பவ ங்கள் இடம் பெறலாம்.

**மீனம்:** உறிவினர் வருகையுண்டு, வில கிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், பயணங்களால் பலனு ண்டு, முயற்சிகள் எளிதில் கைகூ டும், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 174

## பயத்தை எதிர்கொள்ளல்

நீங்கள்தான் அவற்றிற்கு உயிர் கொடுக்கிறீர்கள்; நீங்களே உருவாக்கி விட்டு பிறகு அவற்றை இழந்து விடுவோமோ என்ற பயத்தையும் வளர்த்துக்கொள்கிறீர்கள்.

வெறுமனே உங்களைச் சுற்றியுள்ள அனைவரிடமும், அனைத்திடமும் அளவற்ற அன்புடன் வாழுங்கள். உங்கள் வழியில் வரும் எவர்க்கும் எதற்கும் உங்கள் ஆழமான அன்பை உணருங்கள். நீங்கள் இவ்வாறு வாழ்ந்தால், கௌரவம் தானாகவே உங்களைத் தேடிவரும். மக்கள் உங்களை, உங்கள் பண்பிற்காக மதிப்பார்கள்; பணத்திற்காக அல்ல. இதுபோன்ற கௌரவத்தைப் பொறுத்தவரை இழந்துவிடும் அச்சமில்லை. இதை எப்பொழுதும் பாதுகாக்கும் அவசியமும் இல்லை; நீங்கள் வெறுமனே இதுபோன்ற அச்சங்களில் இருந்து விடுவிக்கப்படுவீர்கள்.

மேலும் பொது மேடைகளில் பேசுவதற்கு பயம் போன்ற பயங்களும், ஒரு விதத்தில் கௌரவத்தை இழந்துவிடும் பயம்தான். ஒரு கூட்டத்திற்கு முன்னால் பேச பயப்படுவதும், உண்மையில் அவர்கள் உங்களைப் பற்றி என்ன சொல்வார்களோ என்ற பயத்தினால்தான். அவர்கள் உங்களைப் பற்றி ஏதேனும் சொன்னால் உங்கள் அஹங்காரத்திற்கு அவதியாகிவிடும் என்று அச்சப்படுகிறீர்கள். இது உங்கள் அஹங்காரத்தைப் பாதுகாக்கும் சாத்வீகமான ஒருவழி. பயம் என்பதே அஹங்காரத்தின் ஒரு வெளிப்பாடுதான். அதைப் புரிந்துகொள்ளுங்கள்.



மக்கள் உங்கள் பேச்சை அங்கீகரிக்காவிட்டால் என்ன? நீங்கள் ஒரு முழுமையான உணர்வுடன் பேசுங்கள்; அதுவே போதுமானது. வெறுமனே மகிழ்ச்சியுடன் இதைச் செய்யுங்கள்; மக்கள் அதைப் பற்றி என்ன சொல்வார்ளோ என்று கவலைப்படாதீர்கள். மக்கள் என்ன சொல்வார்களோ என்ற அச்சம் வந்துவிட்டால் உங்கள் அஹங்காரத்திற்கு அடைக்கலம் கொடுக்கிறீர்கள் என்று பொருள்.

அஹங்காரம் அவதிப்படும் அச்சமும் மக்கள் தியானத்திற்குள் செல்ல அஞ்சுவதற்குக் காரணமாகும். தியானத்திற்குள் செல்லும்பொழுது எப்பொழுதுமே உங்களை- பிரபஞ்ச இருப்புத் தன்மைக்கும் உங்களைச் சூழ்ந்திருக்கும் பிரபஞ்ச இருப்பு சக்திக்கும்- இழந்துவிடும் அச்சம் இருக்கும். அதனால் நீங்கள் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். தியானத்திற்குள் செல்லாமல் தடுக்கிறீர்கள். அதற்கு பதில் நான் உங்களை வேறு எதையேனும் ஜபித்துக் கொண்டிருக்கச் சொன்னால் நீங்கள் சந்தோஷமாக ஜபித்துக் கொண்டிருப்பீர்கள்; அச்சம் இருக்காது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

### றொட்டியில் தோன்றிய ஏசுநாதர் புனித வெள்ளி தினத்தில் பரபரப்பு

பிரித்தானியாவில் பெண்மணி ஒருவர் வாங்கிய றொட்டியிலிருந்து திடீரென ஏசுநாதர் தோன்றியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் Peterborough நகரில் உள்ள கடை ஒன்றில் Lindsey Norman என்பவர் சில சாண்ட்விச்சுகளை வாங்கியுள்ளார்.

லிண்ட்சேவிற்கு வழங்க இருந்த சாண்ட்விச்சுகளை கூர்ந்து பார்த்த கடைக்காரரர், அதில் ஏசுநாதரின் முகமும், அவருக்கு பின்புறம் சிலுவை குறியும் இருந்ததை பார்த்து வியப்படைந்தார்.



இதை லிண்ட்சேவிடம் தெரிவித்தபோது, புனித வெள்ளிக்கு ஒரு நாள் முன்னதாக தோன்றியுள்ள ஏசுநாதர் முகத்தை பார்த்து மகிழ்ச்சி அடைந்துள்ளேன்.

இந்த விசித்திரமான நிகழ்வு இதற்கு முன் நடைபெறவில்லை என கூறிய அவர், புனித வெள்ளி தினத்தில் தான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஏசுநாதர் திடீரென தோன்றுவதாக கூறுவது இது ஒன்றும் முதல் நிகழ்வு அல்ல. கடந்த வாரத்தில் கலிபோர்னியாவை சேர்ந்த பெண் ஒருவரது மேசையில் திடீரென ஏசுநாதர் தோன்றியதாக பரபரப்பை ஏற்படுத்தினார். வியப்பளிக்கும் அந்த உருவத்துடன் உள்ள மேசையை அவர் இணையதள மூலமாக விற்பனைக்கு வைத்துள்ளார்.

அதே வாரத்தில், கொலம்பியாவில் உள்ள ஒரு நிலப்பரப்பு முழுவதிலும் ஏசுநாதர் உருவம் தெரிவதாக பரவிய செய்தியால் ஆயிரக்கணக்கான மக்கள் அந்த இடத்திற்கு படையெடுத்தனர்.

ஏசுநாதர் அவ்வப்போது உணவு மற்றும் பிற பொருள்களில் தோன்றுவதாக கூறுவதில் உண்மைத் தன்மை இல்லை என்பதும் பல பேரின் கருத்தாக உள்ளது.



# சமைப்போம் சுவைப்போம்

## ஆலு ஜாமுன்



**தே.பொருட்கள்:**


உருளைக்கிழங்கு - 1 கப் வேகவைத்து உதிரியாக்கியது
மைதா மா- 1 கப்
சுத்தமான நெய் - 1 டீஸ்பூன்
சமையல் சோடா - 1 சிட்டிகை
எண்ணெய்- பொரித்தெடுக்க
சர்க்கரை - 1 கப்
தண்ணீர் - 1 கப்
ஏலக்காய் பொடி - 1 டீஸ்பூன்

**செய்முறை:**

உருளைக் கிழங்கை வேக வைத்து மேல் தோலை உரித்துக் கொள்ளவும். பிறகு அதை உதிர்த்து விட்டு அளந்து கொள்ளவும். சூடாக இருக்கும் போதே மெத்தென்று மசித்துக் கொள்ளவும். தட்டையான தட்டில் நெய், சோடா மா இரண்டையும் சேர்த்து விரல் நுனிகளால் தேய்த்துக் கொள்ளவும். பிறகு அதில் மைதா சேர்த்து நெய் மாவோடு சீராக கலந்து கொள்ளும் வரை பிசறி விடவும். இத்துடன் மசித்த உருளைக்கிழங்கைச் சேர்த்து கலந்து மென்மையாக மாவைப் பிசைந்து கொள்ளவும் கலந்துகொள்ளும் போது ஒரு போதும் தண்ணீர் சேர்க்க வேண்டாம்.

சிறிய உருண்டைகளாக தயாரித்துக் கொள்ளவும். நடுத்தர சூட்டில் எண்ணெயில் பொன்நிறமாக பொரித்தெடுத்துக் கொள்ளவும். பிசுபிசுப்பான பதத்திற்குச் சர்க்கரைப் பாகைத் தயாரித்துக் கொள்ளவும். அடுப்பிலிருந்து இறக்கிய பின், ஏலக்காய்பொடி சேர்க்கவும். பாகு சூடாக இருக்கும் போதே பொரித்தெடுத்த ஜாமுன்களைப் போட்டு ஊற வைக்கவும். நான்கு மணி நேரம் கழித்து பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## நிகழ்வின் நிழல்கள்



சிவன்மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆன்மிகத் தொண்டர்களுக்காக முன்னெடுக்கப்படும் மூன்று நாட்கள் வதிவிடப்பயிற்சி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று பக்தி பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட போது.



யாழ்.ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது...

(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)



திருகோணமலை, தம்பலகாமம் ஸ்ரீ ஆதி கோண நாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது...



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனின் நிதியுதவியில் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் தமிழரசுக் கட்சியின் பிரதேசத்தலைவர் து.லோகன் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகளை வழங்கிய போது... (படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



கல்வி இராஜாங்க அமைச்சர் இராதகிருஷ்ணன் மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அண்மையில் விஜயம் [illegible] போது...




யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மூதாதையர்; சமனற்ற தீவுகள் கருத்தரங்கு இன்றும் நாளையும்


சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட மூதாதையர் சமனற்ற தீவுகள் என்கின்ற கருத்தரங்கு இன்று 4ஆம் திகதியும் நாளை 5 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சி குஜ்ரால் நிறுவனத்தின் "எனது கிழக்கு உனது மேற்கு" என்னும் 56 ஆவது இரு வருட இடைவெளி காட்சி நிலைப்படுத்தலின் பல்துறைசார் நிகழ்வுகளுக்கான மேடையொன்றின் பல பகுதிகளையுடைய பொது நிகழ்ச்சி சார்ந்து கருத்துருவாக்கஞ் செய்யப்பட்ட நிகழ்ச்சியின் இரண்டாம் பாகமாகும். நாம் நிகழ்காலத்தில் நின்று மூதாதையரது பௌதிக வரலாற்றை அடையாளங் காண முனையும் பொழுது தீர்வுக் கூட்டஞ்சார் சிந்தனையால் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

இக்கருத்தரங்கானது, காலனிய வரலாற்றிலிருந்து காலனிய நீக்க காலம் வரைக்கும் உள்நாட்டு யுத்தத்திலிருந்து யுத்தத்திற்கு பிற்பட்ட யதார்த்தம் வரைக்கும் புவியியல் சார் உறவுகள் மற்றும் பூகோள அரசியல் இறுக்கங்கள் அனைத்துக்குமான சமனற்ற உறவுகள் பற்றிய வரலாற்றெழுத்தியல் ஒழுங்கமைப்பு புவிசார்ந்த தன்மை கற்றும் இதனூடாக எழும் கேள்விகளை உள்ளடக்கிய தீர்வுக் கூட்டஞ்சார் சிந்தனையின் சிக்கலான நிகர்நிலைக் கோல அமைவின் சிக்கலான தன்மையினை அடையாளங்கண்டு வரையமுற்படுகின்றது.

முக்கிய குறிப்பு: அனைத்து அமர்வுகளும் தமிழ் மொழி பெயர்ப்புடன்

சமகால கலை , கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகம் , 199, கோவில் வீதி , நல்லூரில் இடம்பெறவுள்ளது. (இ-5)




## தொழில்நுட்பம்சார் அறிவை மாணவர்கள் பெறவேண்டும்

தொழில்நுட்பத்தின் அபரவிதமான வளர்ச்சி வாழ்க்கை முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய மாணவர்கள் தொழில்நுட்ப உலகுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் தொழில்நுட்பக் கல்வியில் பூரண அறிவை பெற வேண்டும். தொழில்நுட்பத் துறை சார்ந்து பெற்றுக்கொள்கின்ற அறிவே ஒரு மனிதனை முழுமையாக்குகின்றது என இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பாலரட்ணம் நந்தகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ். கே.எழில்வேந்தன் தலைமையில் தம்பர் மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றபோது அந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையிலேயே உதவிப் பொது முகாமையாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைக் காலத்தில் பெற்றுக் கொள்ளும் ஏட்டுக்கல்வி மட்டும் வாழ்க்கையில் போதாது. தனியே பெறப்படுகின்ற ஏட்டுக்கல்வியின் ஊடாக வாழ்வில் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது. மாணவர்கள் கல்வியோடு இணைப் பாடவிதானச் செயற்பாடுகளாகிய விளையாட்டு கவின்கலை போன்ற துறைகளிலும் பங்குகொண்டு பாடசாலைக் காலத்தை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களிடத்தில் தலைமைத்துவம் விட்டுக்கொடுக்கும் பண்பு பிறருடன் இணைந்து கருமமாற்றும் இயல்பு, குழு ஒருமைப்பாடு என்பன வளர்தெடுக்கப்படும். இளம் தலைமுறையினராகிய மாணவர்கள் சமய விழுமியப் பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை வாழ்வியலில் கடைப்பிடித்து வளர்த்தெடுக்க வேண்டும். இதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

தற்கால தொழில்நுட்ப வளர்ச்சி வாழ்க்கை முறைமையிலுள்ள அனைத்து விடயங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூகப் பொருளாதார முறையில் மாற்றம் போன்ற மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மாற்றம் ஒன்றே மாறாதது என்னும் அடிப்படையில் மாறிவரும் பூகோள உலகுக்கு ஏற்ப சவால்களை எதிர்கொள்ளத்தக்கவர்களாக மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அரச இலக்கிய விருது வழங்கல்-2015 2014 ஆம் ஆண்டுக்கான நூல் மதிப்பீடு

2015 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கும் வைபவத்தின் பொருட்டு 2014 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட நூல்களை மதிப்பீடு செய்யும் போது அதனை முறையாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ளும் நோக்கில் எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் தமது நூல்களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2014 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அதே ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட 48 பக்கங்களுக்கு குறையாத ஒரு நூலின் மூன்று (3) பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட வேண்டிய நூல்களை **செயலாளர், அரச இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல** என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம். நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2015 மே மாதம் 5 ஆம் திகதி ஆகும்.

அரச விருது வழங்கலுக்காக நூல்களை மதிப்பீடு செய்வதற்கு கீழ்க்காணும் பிரிவுகளை சார்ந்த தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரமான நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

சுய நாவல், சுய சிறுகதை, சுய கவிதைப் படைப்பு, சுய இளையோர் இலக்கிய படைப்பு, சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல் புனைகதை, சிறுவர் இலக்கிய படைப்பு (16 பங்கங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்), சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, மொழி பெயர்ப்பு- நாவல், மொழிபெயர்ப்பு- சிறுகதைத் தொகுப்பு, மொழிபெயர்ப்பு- கவிதைப் படைப்பு, மொழி பெயர்ப்பு- நாடகம், மொழிபெயர்ப்பு- நாடகம், மொழி பெயர்ப்பு- புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, நானாவித விடய நூல்கள் , இதுகுறித்த மேலதிக விபரங்களுக்கு 021 222 2209 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் திருமதி எஸ். தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ-3)

## ஸ்ரிக்கர்கள் ஒட்டும் அச்சுவேலி பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் பாவனை செய்யும் வாகனங்களுக்கு ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அச்சுவேலி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி ரி.டி.தனுஸ்க பண்டார தெரிவித்தார். துவிச்சக்கரவண்டி, உழவு இயந்திரம், சிறிய ரக உழவு இயந்திரம் ஆகியவற்றுக்கு இந்த ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படுகின்றன.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பிரதேசங்களில் இரவு வேளைகளில் நடைபெறும் விபத்துக்களை தடுக்கும் வகையில் இந்த ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படுகின்றன. 900 வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிககையை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளதாக போக்குவரத்து பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-5)




## 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கொல்லங்கலட்டி சடைச்சபை ஞான வைரவர் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து அன்றைய தினம் மாலை 6 மணிக்கு விசேட பூசைகள் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று வைரவப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூத்தண்டிகையில் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (இ-5)

## தேசிய கலை இலக்கியப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக கட்டுரைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவிதைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட), கவிதைப் பாடல் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட, பாலர் பிரிவு), கையெழுத்துப் போட்டி (பாலர் பிரிவு), பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் யாவும் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகும். பாலர் பிரிவு 6-10 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் கனிஷ்ட பிரிவு 11-15 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் சிரேஷ்ட பிரிவு 16-19 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் 19 வயதின் மேல் திறந்த பிரிவிலும் பங்குபற்றலாம். கவிதை பாடல் போட்டி மற்றும் கையெழுத்துப் போட்டி என்பன பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நிலையத்தில் நடத்தப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கவும்.

இந்தப் போட்டிகளில் 10 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தனி நபர்களும் சுயமாக அல்லது பொது நிறுவனங்களாக சனசமூக நிலையங்கள், கலாமன்றங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாகப் பங்கு கொள்ளலாம். போட்டிகள் திறந்த போட்டிகளாக நடைபெறும். பாடல் ஆக்கப் போட்டி, நாட்டார் [illegible] கலை, கற்றல் [illegible], இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி என்பன நடைபெறும்.

போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெறும் மூன்று பேருக்குப் புத்தகப் பொதிகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தப் போட்டிகளுக்கான பொது நிபந்தனை பற்றிய விபரங்களை அறிய யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார பிரிவுடனும் நேரடியாகவோ அல்லது 021 222 2209 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் திருமதி. எஸ்.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ-3)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை 8 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## பெருந்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் கோவில் பெருந்திருவிழா நாளை மறுதினம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (இ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் கோரிக்கையை நிராகரித்த இலங்கை அரசுக்கு ஜி.கே.வாசன் கடும்கண்டனம்

(சென்னை)

**தமிழக மீனவர்களின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்தது கண்டனத்துக்குரியது என தமாகா கட்சித் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.**



கிருஷ்ணகிரியில் நடந்த தமாகா கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி காசிலிங்கம் மகள் திருமணத்தில் நேற்றுப் பங்கேற்ற, தமாகா தலைவர் ஜி.கே.வாசன் செய்தியாளர்களிடம் பேசியபோது,

"இந்திய - இலங்கை மீனவர்கள் 3 ஆவது கட்ட பேச்சுவார்த்தையில், இலங்கை கடல் பகுதியில் ஆண்டிற்கு 83 நாட்கள் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று தமிழக மீனவர்களின் நியாயமான கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

இது கண்டனத்துக்குரியது. இதில பரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் தமிழக முதல்வர் ஆகியோர் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் ஆதாயத்திற்காக பேசுவதாக, மத்திய அமைச்சர் சதானந்தகவுடா கூறியிருப்பது ஏற்புடையது அல்ல. எனவே பிரதமர், அமைச்சரை கண்டிக்க வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் சில இடங்களில் மட்டும் சுங்கம் வசூலிப்பதை நீக்கிவிட்டு, பெரும்பாலான இடங்களில் சுங்க கட்டணத்தை உயர்த்தியுள்ளனர்.

இதனால் ஏற்கனவே விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

எனவே தற்போது உயர்த்தியுள்ள சுங்க கட்டணத்தை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும். கிருஷ்ணகிரி சுங்கச்சாவடியை இடமாற்றம் செய்திட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## 2050ல் உலக மக்கள் தொகையில் இந்துக்களுக்கு மூன்றாவது இடம்

### ஆய்வறிக்கையில் தகவல்

2050ஆம் ஆண்டில் உலக மக்களின் எண்ணிக்கையில், இந்துக்கள் 3 ஆவது இடத்தில் இருக்கலாம் என்று ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த மதத்தையும் பின்பற்றாதவர்கள், தற்போது மூன்றாவது இடத்தில் உள்ளனர். 2050 இல் உலக மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள் 290 கோடியாகவும், முஸ்லிம்கள் 280 கோடியாகவும் இருக்கக் கூடும்.

இதுதொடர்பாக, அமெரிக்காவின் பீவ் ஆராய்ச்சி மையம், மதங்கள் குறித்து நடத்திய ஆய்வறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

2050 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் இந்துக்கள் 14.9 சதவீதத்தை எட்டக் கூடும்.

அதாவது தற்போதுள்ள இந்துக்களின் எண்ணிக்கை 100 கோடி என்பது 140 கோடியாக அதிகரிக்கக் கூடும். இது உலக அளவில் மூன்றாம் இடமாக இருக்கக் கூடும்.

இதேபோல், உலகிலேயே மிக அதிகமான முஸ்லிம்களைக் கொண்ட இந்தோனேஷியாவை இந்தியா மிஞ்சக் கூடும்.

2050 இல் உலக மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள் 290 கோடியாகவும், முஸ்லிம்கள் 280 கோடியாகவும் இருக்கக்கூடும்.

அடுத்த 40 ஆண்டுகளுக்கு, உலக மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள்தான் முதலிடத்தில் இருப்பார்கள். அதே நேரத்தில் கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களின் வளர்ச்சி விகிதத்தைவிட, முஸ்லிம்களின் வளர்ச்சி விகிதம் அதிகமானதாக இருக்கலாம்.

இந்த நிலை தொடர்ந்தால் 2070 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் முஸ்லிம்கள் முதலிடத்தைப் பெறலாம் என்று அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்- தேசிய விலைக்கேள்வி அறிவித்தல்

**பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகளை அகற்றுதலுக்காக கனரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்- 2015**

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அவர்களினால் வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் பற்றைக் காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகளை அகற்றுதலுக்கான பின்வரும் கனரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதலுக்காக குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

**01. Dozer 02. Excavator 03.JCB 04.Motor grater**

தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயல கம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 06.04.2015 தொடக்கம் 09.04.2015 வரையான நாட்களில் காலை 9 மணியளவிலிருந்து பிற்பகல் 3 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இதனை மாவட்டச் செயலகத்தின் www.jaffna.dist.gov.lk என்ற இணையத்தள முகவரியிலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். குறியீடு செய்து பொறியிடப்பட்ட விலைக் கேள்விகள் யாவும் இரு பிரதிகளில் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 10.04.2015 ஆம் திகதியன்று பிற்பகல் 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் யாவும் 10.04.2015 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். விலைக்கேள்வி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.**

## மகாதேவ ஆச்சிரமம்

**MAHADEVA ASHRAMAM**
**Regd.No:SVP 104/44 of 29.10.1976**
**TP: 024 324 3443**

### விசேட பொதுக்கூட்டம்

**இடம்:-** ஆச்சிரம பிராத்தனை மண்டபம்

**காலம்:-** 11.04.2015 சனிக்கிழமை மாலை 3.30 மணி.

**விடயம்:-** ஆச்சிரம ஆன்மீக வளர்ச்சி, உறுதித்தன்மை, இடர்பாடுகள் பற்றி ஆராய்ந்து தீர்வு காணல்.

பழைய, புதிய அங்கத்தவர்களையும் அரச அதிகாரிகளையும் நலன் விரும்பிகளையும் அன்பர்கள் யாவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

(தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக் கொள்ளவும்)

**குறிப்பு:- அங்கத்துவம் இல்லாத அன்பர்கள் அங்கத்தவர்களாகி ஆன்மீகம் வளர்ப்போம்.** (9972)

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**
**இறைபணியில்**
**ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள்,**
**குருபீடாதிபதி.**

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 39 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L கனடா NOT PR<br>தொ.இ: B/4359 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 48<br>உயரம்: 4'7"<br>தகைமை/தொழில்: MFA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4399 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் சவாதி<br>கி.பா: 20<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் A/L பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4360 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 22 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/759 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 33 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் A/L பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4361 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 69 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ: G/760 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 24 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: ஆசிரியர் லண்டன் NOT PR<br>தொ.இ: B/4362 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி<br>தொ.இ: G/761 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**

[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible] கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்ப காலத்தில் ஏற்படும் நோய்களை தடுப்பதற்கு கால்நடைகளுக்கு சிகிச்சை

(மல்லாவி)

மத்திய அரசின் கால்நடை அமைச்சின் கீழ் இயங்கும் ''நில்கோ'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்தின் அனுசரணையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கால்நடை பண்ணையாளர்களினது கால்நடைகளுக்கு வெப்ப காலத்தில் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் முன்னோடி இலவச சிகிச்சை முகாமொன்று நடைபெற்று வருவதாக வட பிராந்திய நில்கோ நிறுவனத்தின் பிரதேச முகாமையாளரும் இணைப்பாளரும் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச விரிவாக்கல் உத்தியோகத்தரும் பண்ணை முகாமையாளருமாகிய வாதவூரான் தயாபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றத்திற்கமைய வன்னிப் பிரதேசங்களில் கடும் வெப்பநிலை நிலவி வருகின்றது.

இதனால் கால்நடைகளுக்கு வெப்பம் தொடர்பான நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதால் நோய்வரும்முன்தடுக்கும்நோக்குடன் கால்நடைகளுக்கான நடமாடும் இலவச சிகிச்சை முகாம் ஒன்று ஒட்டுசுட்டான் செயலகப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் முன்னோடிநிகழ்வாக கடந்த மாதம் 25 ஆம் திகதி ஒட்டு சுட்டான் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.கமகே தலைமையிலான குழுவினர் ஒலுமடு, கரிப்பட்ட முறிப்பு, மாங்குளம், புலுமச்சிநாத குளம் ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடை பண்ணை யாளர்களினது 600இற்குமேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஏனைய பிரதேசங்களில்சிகிச்சைவழங்கப்படாது இருக்கும் கால்நடை பண்ணையாளர்களினது கால்நடைகளுக்கு அடுத்து வரும் நாட்களில் மேற் படி சிகிச்சைமுகாம் மூலம் சிகிச்சை வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## கல்விக்கு விளையாட்டு தடை இல்லை



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்ற மாணவனான ஜெயரட்ணம் கஜீபன் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் 9ஏ சித்தி பெற்று கல்விக்கு விளையாட்டு தடையில்லை என்பதை நிலைநிறுத்திக்காட்டியுள்ளார்.

குறித்த பாடசாலையின் கடினப்பந்து துடுப்பாட்ட அணியில் விளையாடி வெற்றிகளை அவ்வணிக்கு தேடிக் கொடுத்த இம்மாணவன் தற்போது 17 வயதுப் பிரிவு அணிக்கு தலைவராகவுள்ளார். இம் மாணவன் ''வன்னியின் பெரும் போர்'' என்ற கிளி/முல்லை நட்புக்கிண்ண துடுப்பாட்டப் போட்டியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் வருவதை தடுப்பது சர்வாதிகாரமாகும்

## செல்வம் எம்.பி.கண்டனம்

(கிளிநொச்சி)

எதிர்க்கட்சி தலைவராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கிடைக்க வேண்டும் என்கின்ற கருத்தியலுக்கு முரண்பாடாக பேரினவாதிகள் வெளியிட்டு வரும் கருத்து, சர்வாதிகாரபோக்கை வெளிக்காட்டுவதாக உள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் இரண்டாவது தடவையாகவும் எதிர்க்கட்சி தலைவராக தமிழர் ஒருவர் வருவதற்கு காலம் கனிந்துள்ள நிலையில் அதனை தடுக்க பேரினவாதிகள் பெரும் பிரயத்தனங்களை எடுத்து வருகின்றனர்.

ஜனநாயகத்தை விரும்பிய தமிழர்கள் கால ஓட்டத்தில் பேரினவாதிகளின் பல்வேறான அடக்குமுறைகளினால் ஆயுத போராட்டத்துக்கு தள்ளப்பட்டனர்.

ஜனநாயக நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிர்க்கட்சி தலைவராக வருவதற்கு கூட வாய்ப்பில்லையானால் அது ஜனநாயகமாக கருத்தப்படாது என்பதே உண்மையாகும். ஆளுமையும் திறமையும் அரசியல் அனுபவமும் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை வழங்குவதற்கு பெரும்பான்மை பேரினவாதிகள் தடையாக இருப்பது என்றும் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை என்பதனையும் எத்தீர் வும் தமிழர்களுக்கு கிடைக்காது என்பதனையுமே மறைமுகமாக காட்டி நிற்கின்றது.

இவ்வாறன நிலை தமிழர்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையற்ற தன்மையை உருவாக்கக் கூடிய வாய்ப்புகளுக்கே வழிசமைக்கும் எனவும் தனது அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)




# 100 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

சுவாமி ரிஷி தொண்டு நாதர் சுவாமிகளின் மனிதநேயப் பணித்திட்டத்தின் ஒரு பகுதியாக கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் வைத்து அண்மையில் ரிஷி தொண்டு நாதர் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

இத் தென்னங்கன்றுகள் புதுக் குடியிருப்பிலுள்ள கோம்பாவில் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஐந்து கன்றுகள் அடிப்படையில் வழங்கப்பட்டன.

கடந்தகாலயுத்தத்தின்போது இந்தப் பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்ததனால் அதிக தென்னைமரங்கள்சேதமடைந்து அழிவுக்குள் ளாகியிருந்தன. இந்நிலையில் மேற்படி பிரதேச மக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# வாகன விபத்தில் முதியவர் மரணம்



(தருமபுரம்)

ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

வாகனம் முதியவரை மோதித்தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் பரந்தன்-முல்லை வீதியிலுள்ள முரசுமோட்டை சங்கர நாராயணர் ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

இதில் கொடிகாமத்தைச் சேர்ந்த த.பொன்னுத்துரை (வயது-80) என்ற வயோதிபரே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப நபர் குறித்த ஆலயத்தில் இரவு காவல் கடமையில் ஈடுபட்டுவிட்டு அதிகாலை வெளியே சென்ற வேளை இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது வாகனம் அவரை 20மீற்றர் தூரம் வரை இழுத்து சென்றமையை அடுத்து கால் முறிந்து உடலில் காயங்கள் ஏற்பட்டு சடலமாக காணப்பட்டது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (2-282)

# செயலாளரின் இடமாற்றம் இரத்து

## வன்மையாக கண்டனம் தெரிவிக்கிறார் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர்

(மல்லாவி)

வடக்கு மாகாணகல்வி அபிவிருத்திக்கு தடையாக வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ். பளிஹக்கார செயற்படுகின்றாரா என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர் கிளைச்சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கும் வடக்குமாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்தமாதம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தின் கல்விப் புலத்தில் அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்ற சில கல்வி அதிகாரிகள் மற்றும் சில அதிபர்கள் ஆகியோரினது தவறான நிர்வாகச் செயற்பாடுகள், அணுகுமுறைகள், நிதிமோசடிகள் ஆகியவை தொடர்பில் தரவுகள் மற்றும் ஆதாரங்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் இராணுவ செயற்பாடுகள் தொடர்பாகவும் பாடசாலைகளுக்கு அருகில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளமை மற்றும் பாடசாலை நிர்வாகங்களில் இராணுவ அழுத்தங்கள் காணப்படுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நியமனத்தின் போது ஆளுமையுடன் தகுதியான ஒருவரையும் நியமிப்பது மற்றும் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதனால் ஏற்படும் பாதி ப்புக்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட ஆளுநர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கவனத்தில் எடுப்பதாகத் தெரிவித்திருந்த நிலையில் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரின் இடமாற்றத்தினை இரத்து செய்தமை தொடர்பாக தமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்தனின் ஏழாவது ஆண்டு நினைவு தினம் இன்று

## நீத்தார் பெருமை

காலத்தால் அழியாத காவியங்கள் பல தந்த ஈழத்துப் புலமைப் பாரம்பரியத்தின் அழியாத சொத்து பண்டிதர் க.சச்சிதானந்தன். தும்பளைப் பதியில் கணபதிப்பிள்ளைச் சோதிடரின் மகனாகப் பிறந்து மாவைக் கந்தனின வீதியில் வசித்து வந்தவர்.

இவருடைய ஆக்கங்கள் பல்துறைப்பட்டன. வானியல், சோதிடம்,உளவியல், கணிதம் என்பவற்றுடன் ஆக்க இலக்கியங்கள்,இசை என்பவற்றிலும் ஈடுபாடு கொண்டவர். இவரது ஆக்க இலக்கியங்களான கவிதைகள், காவியங்கள், சிறுகதைகள், அன்னபூரணி என்னும் அரியதோர் நாவல் இவற்றின் மூலமே இவர் தமிழுலகில் அறிமுகமானார்.

ஆனந்தத்தேன் கவிதைத் தொகுதியும் எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் என்ற தொகுதியும் இவரது தெவிட்டாத பல கவிதைகள் தனிப்பாடல்களைச் சுமந்துள்ளன. பிஞ்சுக் குழந்தைகளுக்காக இனிய குழந்தைப்பாடல் தொகுதி ஒன்றும் ''மஞ்சு மலர்க்கொத்து'' என்னும் பெயரில் ஆக்கியுள்ளார்.

யாழ்ப்பாண காவியம், இலங்கையின் போராட்ட காலத்துச் சம்பவங்கள் பலவற்றை எடுத்துக்காட்டும் பருவப் பாலியர் படும்பாடு, விடுதலைக்கு வேறொரு விலங்கும் என்ற இரண்டு காவியங்கள் இவற்றுடன் காத்திருந்தார், காதலுக்கே அர்ப்பணித்தாள் தன்னை என்னும் இரண்டு குறுங்காவியங்கள் இவற்றையெல்லாம் எமக்களித்த புலமையாளர்.

அரசியலில் தமிழரசுக் கட்சியின் பழைய உறுப்பினர் கு.வன்னியசிங்கம் நினைவாக தியாகமாமலை என்னும் நூலை ஆக்கியவர்.

விபுலானந்தருடன் இவருக்கிருந்த தொடர்பு இசையில் தமிழர் யாழியல் என்னும் நூலை ஆக்குவதற்கு உதவியது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் 1930-1940 காலத்தில் எரியும் பிரச்சினையாக இருந்த சாதிப்பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். அக்காலத்தில் ஈழகேசரியில் ஆனந்தன் என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய சிறுகதைகளான ஹரிஜனங்களின் கண்ணீர், தண்ணீர்த்தாகம் என்பவை இன்றும் பேசப்படுபவை.

சச்சிதானந்தன் உயிரோடு இருந்த காலத்தில் அவரைச் சரியாகப் பயன்படுத்த எமது கல்விச்சமூகம் தவறிவிட்டது. அவரது கவிதைகள், காவியங்கள் காத்திரமானவை. இன்றைய இளைய மாணவ சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டிய ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஒருகாலத்து வாழ்வியல்,அரசியல்,பண்பாடு என்பவற்றைப் பிரதிபலித்து நிற்பவை. இவை பாடத்திட்டங்களிலே சேர்க்கப்பட்டு கற்பிக்கப்பட வேண்டியவை.

சாவிற் தமிழ் படித்துச் சாக வேண்டும்-என்றன்
சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்

என்ற தமிழ்ப்பற்றுக் கொண்டு இறுதிக்காலம் வரை தமிழுலகிற்காக உழைத்த கவிஞர் சச்சிதானந்தன் 1921.10.19 இல் பிறந்து 2008.03.21 இல் மறைந்தார். இவரது ஆக்க இலக்கியங்கள் இருக்கும்வரை இவரது புலமையும் பெயரும் நீங்காது நிலைத்திருக்கும்.

**பண்டிதர் சச்சிதானந்தனின் மாணவி,**
**திருமதி நவமணி ராஜகுமார் (ஆசிரியை)**

# எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய்ய உத்தரவிடுவதா?

## மீனவர்கள் கடும் கண்டனம்

எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய்வோம் என்று கூறிய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு தமிழகத்தில் கடும் கண்டனம் எழுந்துள்ளது. இராமேஸ்வரத்தில் செய்தியாளர்களிடம் நேற்று பேசிய மீனவர் சங்கத் தலைவர் போஸ் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதியும் தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பேசியிருப்பது கடும்கண்டனத்துக்குரியது என்றார். இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இல்லாவிட்டால் மீனவர்கள் ஒன்று திரண்டு போராட்டம் நடத்துவோம் என கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பேச்சுக்கு தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகனும் கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழக இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை நடக்கும் போதே மீனவர்களை கைது செய்வோம். படகுகளை பறிமுதல்செய்வோம்என பேசியிருக்கும் ஜனாதிபதி மைத்திரியை மத்திய அரசு எச்சரிக்க வேண்டும்என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண தனி அமைச்சகம் உருவாக்குவோம் என்று உறுதியளித்த மோடி ஆட்சிக்கு வந்து 10 மாதங்கள் ஆகியும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வேல் முருகன் குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-5)

# க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகள்-2014

**யா/விக்டோறியா கல்லூரி சுளிபுரம்**

க.யசோதா-8ஏபி, தெ-கஜிதா-8ஏபி, யோ.ஜங்கரன்-7ஏ2பி, வி.சிவப்பிரகாஸ்-7ஏ2பி, தி.பரதன்-7ஏபிசி,நே-சிந்துஜன்-6ஏ2பிசி, நா.தவச்செல்வி-6ஏ2பிசி, நி.கஜனி- 6ஏ2பிஎஸ், த.சிறிரங் கன்-5ஏ4பி, த.மோகனரூபன்-5ஏ2பி2சி, ஸ்ரீ.சணோஜன்-5ஏ2பிசி, ர.றூபலஸ்மன்-5ஏ 2பிசி, சி.ராகவன்-5ஏ2பிசி, ர.நிசாந் தன்-5ஏ3சிஎஸ், சி.நிரோஜன்-4ஏ 4பிசி, ந.துசானி-4ஏ பி3சிஎஸ்.

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**

உ.பவிந்தா-8ஏசி, த.கோபிகா-7ஏபிசி, சு.சியாளினி-6ஏசிஎஸ், கோ.கஜனி-3ஏ3பிசி2எஸ், சி.றக்சனாத்-2ஏ3பி2சி2எஸ், சி.சதுர்சன்-2ஏ2பி3சிஎஸ், சு.கோபி நாத்-2ஏபி4சிஎஸ், த.துளசி-2ஏ5சிஎஸ்.

**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி**

கே.தாஉசன்-7ஏபி, எம்.கரிகரன்-6ஏ2சிஎஸ், ஆர்.யதுசன்-5ஏ2பி2எஸ், ஆர்.பகீரதன்-5ஏ 3பி, எஸ்.துசியந்தன்-4ஏபி3சி, வி.சஜீவன்-4ஏ2பி2சி, எல்.கௌ தமன்-3ஏ2பிசி3எஸ், எம்.கெவின்ஸ்லேபன்-3ஏ4சிஎஸ், கே.கிருத்திகன்-3ஏபி5எஸ், பி.சயந்தன்-3ஏ4சிஎஸ், ஆர்.சயரூசன்-3ஏபி3சி2எஸ், ஆர்.கரிஸ்பாபு-3ஏ3பி2சி, எஸ்.தனா-3ஏபி3சி2எஸ், ஆர்.வனுசன்-3ஏ2பி3சிஎஸ், ஏ.ஜெந்தன்-3ஏபி2சி 2எஸ், வி.டிசாந்தன்-2ஏ2பி3சிஎஸ், யு.ரதுசன்-2ஏ3சி4எஸ், பி.நிருஜனநாத்-2ஏ2பி2சிஎஸ், கே.சிந்துஜன்-2ஏ3பி3சி, ஆர்.தசிந்தன்-2ஏ3பி2சிஎஸ், ரி.திவ்வியராஞ்சித்-2ஏ2பிசி4எஸ், இ.துஜிரதன்-2ஏ5பி2சி, எம்.வதுசன்-2ஏ2பி 3சிஎஸ், ரி.வித்தாகன்-2ஏ3பிசி எஸ், ஆர்.ரஜீபன்-2ஏ4சி2எஸ், கே.பார்த்தீபன்-2ஏ3சி3எஸ், கே.ரூசீபன்-2ஏ3பி2சிஎஸ்.

**யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்**

த.லக்ஷணா- 4ஏபி2சிஎஸ், ப.நிமலகாந்தன்-3ஏ2பி3சி,ப.லஜீபன்-2ஏ3பி2சிஎஸ், வ.சுபாதிகா-ஏ2பி4சிஎஸ், பா.தீபனா-ஏ5சி2எஸ், ச.ரஜீபன்-2பி4சி2எஸ், சோ.சுகன்யா-ஏபிசி4எஸ்,து.துருசியா-2பிசி4எஸ்,ச.கௌசிகன்-2பி4சிஎஸ், அ.ஜிந்துசன்-பி3சி4எஸ், பா.சங்கீர்த்தனன் பி3சி3எஸ்,ச.ரஜிதா-2சி5எஸ்,ஞா.தர்ஷிகா-2சி4எஸ், கு.ஜங்கரன்-ஏ3சி3எஸ், ஸ்ரீ.கௌசல்யா-2ஏசி4எஸ்,ப.சுஜீபா-ஏ2சி2எஸ்,க.சமீரா-3சி2எஸ்,அ.சிபாணா-2சி3எஸ்,ர.சுஜீப்காந்-6எஸ்

# ஊவா முதலமைச்சருக்கு எதிராக முட்டாள்கள் தினத்தில் சுவரொட்டி

எனக்கெதிராக சுவரொட்டிகள் ஒட்டியது முட்டாள்களின் தினத்தில் முட்டாள்கள் செய்யும் வேலையாகும் என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சாடியுள்ளார். முட்டாள்கள் தினமான கடந்த புதன்கிழமை ஊவா மாகாண முதலமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் பதுளை நகர் முழுதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. நேற்று முன்தினம் முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே. அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில். "இதுவரை காலமும் எனது கையிருப்பில் உள்ள பணத்தை செலவு செய்தே சுவரொட்டிகளை வடிவமைத்து வந்தேன். இன்று இனந்தெரியாத யாரோ அவர்களது சொந்த பணத்தை செலவு செய்து எனக்காக் சுவரொட்டிகளை பதுளை நகர் முழுதும் ஒட்டியுள்ளனர். இவ்வாறு சுவரொட்டிகளை ஒட்டியவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

இந்த சுவரொட்டிகள் மிகவும் அழகாக உள்ளன. சாதாரண மனிதர்கள் சுவரொட்டிகள் முழுவதையும் வாசிப்பதில்லை. இந்த சுவரொட்டிகளில் புன்னகை மட்டுமேயுள்ளது. அதனால், சுவரொட்டியில் உள்ளவற்றை வாசிப்பதில் அர்த்தமில்லை. உண்மையில் இது முட்டாள்களின் தினத்தில் முட்டாள்கள் செய்த வேலை என்றே கூறுவேன்'' என்றார். எனக்கு எதிராக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்? பதாகைகள் முழுவதையும் அகற்ற வேண்டுமா என பொலிஸார் என்னிடம் கேட்கின்றனர்.

பதுளை நகரை அலங்கரித்துள்ள இந்த பதாகைகள் ஒன்றையேனும் அகற்ற வேண்டாமென்றே நான் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனெனில் இந்த பதா கைகளில் எனது முகம் இல்லை. அதனால், தயவு செய்து யாரேனும் செலவு செய்து எனக்கு இவ்வாறான பதாகைகளை வடிவமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடைக்குச் சென்று அமைச்சரவையை கேட்பவர்களுக்கே அவை பொருந்தும். அவர்களுக்கே பதாகைகளை ஒட்ட வேண்டும். இவ்வாறான நடத்தையில் ஈடுபட்டவர் யாரென எனக்கு தெரியும். இவ்வாறான துர்நடத்தையில் ஈடுபட்டவர்களை எதிர்வரும் காலங்களில் உங்கள் முன் நிறுத்துவேன்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# 6 தீவிரவாதிகளுக்கு தூக்குத் தண்டனை

## இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

பாகிஸ்தானில் 6 தீவிரவாதிகளுக்கு தூக்கு தண்டனை விதித்து இராணுவ நீதிமன்றம் நேற்றுமுன் தினம் தீர்ப்பளித்ததுள்ளது


பாகிஸ்தானில் பெஷாவர் இராணுவ பாடசாலையில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 134 குழந்தைகள் மற்றும் 19 ஆசிரியர்களை சுட்டுக் கொன்றனர். இதைத் தொடர்ந்து அரசு தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் அண்மையில் 6 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. ஒருவருக்கு ஆயுள் தண்டனைவழங்கப்பட்டது. அவர்கள் அனைவரும் தீவிரவாதம், கொலை. தற்கொலை தாக்குதல். பிணைத்தொகைக்காக கடத்தல் உள்ளிட்ட சம்பவங்களில் தொடர்புடையவர்கள்.

இந்தகவலைஇராணுவதலைமை தளபதி ஜெனரல் அசிம் பாஜ்லா டுவிட்டர் இணையதளத்தில் தெரிவித்து ள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொன்னாக்கும் வித்தை

சந்திரன் அவனுடைய பெற்றோருக்கு ஒரே பிள்ளை! அவனுடைய தந்தை ராமராஜன் ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். வியாபாரத்தில் ஒருமுறை பெரிய நஷ்டம் ஏற்பட, அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் ராமராஜன் இறந்து போனார். அவனுடைய தாய் பார்கவி தங்கள் வீடு, நில புலன்கள் யாவையும் விற்றுக் கடனை அடைத்தாள். அதன்பின் ஒரு குடிசையமைத்து அதில் தன் பிள்ளையுடன் வசிக்கத் தொடங்கினாள். பார்கவி, வயிற்றுப் பிழைப்புக்காகப் பல வீடுகளில் வேலை செய்யத் தொடங்கினாள்.

அந்த நிலையிலும் தன் பிள்ளையை ஒழுங்காக வளர்க்க எண்ணிய அவள் சந்திரனை ஓர் அரசுப் பள்ளியில் சேர்த்தாள். தொடக்கத்தில் சந்திரனும் ஒழுங்காகப் படித்தான். ஆனால் அவன் பெரியவனாகி பதினைந்து பிராயத்தை எட்டியபோது, தங்கள் குடும்பத்தின் ஏழ்மை அவன் மனதை உறுத்த ஆரம்பித்தது. கிராமத்தில் மற்ற பணக்காரர்களைக் காணும் போது, தானும் அவர் களைப் போல் ஆக ஆசைப்பட்டான். ஆனால் பள்ளியில் படித்து முடித்து ஒரு சாதாரண வேலையில் சேர்ந் தால் தன் ஆசை நிறைவேறாது என்றும் உணர்ந்தான்.


ஒருநாள், இரும்பைத் தங்கமாக்க முடியும் என்றும், அந்த ரகசிய வித்தை சாமியார்களுக்குத் தெரியும் என்றும் சிலர் பேசிக் கொண்டு இருப்பதைத் தற்செயலாகக் கேட்ட பின், சந்திரனுக்குப் படிப்பில் ஆர்வம் குன்றிவிட்டது.

தொட்டதெல்லாம் பொன்னாக்கும் வித்தையை உடனே கற்றுக் கொள்ளத் துடித்தான். ஊரில் எந்த சாமி யார் தென்பட்டாலும், அவர்களைச் சுற்றியலைந்து அந்த வித்தையைத் தனக்குக் கற்றுத்தரச் சொல்லி வற்புறுத்தினான்.

ஆனால் அவன் சந்தித்த சாமியார்களில் சிலர் தாங்கள் பொருள் ஆசையை அறவே துறந்து விட்டதனால் பொன்னாக்கும் வித்தையைப் பற்றி தெரியாது என்றனர். ஆனால் சந்திரன் மனம் தளரவில்லை. தொட்டதெல்லாம் பொன்னாக்கும் வித்தை தெரிந்த சாமியார் ஒருவரை என்றாவது சந்திப்போம் என்று உறுதியாக நம்பினான். தன் பிள்ளையின் போக்கைக் கண்டு பதறிப்போன பார்கவி அவனுக்கு அறிவுரை கூறித் திருத்த முயன்று தோல்வியுற்றாள்.

ஒருநாள் இரவு அவனுக்கு உணவு பரிமாறுகையில் பார்கவி, "நீ இப்போதெல்லாம் அடிக்கடி பள்ளிக்கு வருவதில்லை என்று உன் ஆசிரியர் என்னிடம் சொன்னார். நீ பள்ளிக்குச் செல்லாமல் வேறு எங்கே போகிறாய்?" என்று கேட்க, சந்திரன் அவளிடம் உண்மை சொல்ல மறுத்தான். தாயார் அவனை வற்புறுத்தவும், கோபங்கொண்ட சந்திரன் பாதி சாப்பாட்டிலேயே வீட்டை விட்டுச் சென்று விட்டான். கால் போன போக்கில் வெகு நேரம் சுற்றிய பிறகு, களைத்துப் போய் அம்மன் கோயிலை அடைந்து அங்கு சென்று அமர்ந்து ஓய்வெடுக்க ஆரம்பித்தான்.

நடு இரவில் விழித்துக் கொண்டவன், தனக்கருகில் ஒரு சாமியார் பத்மாசனம் போட்டு அமர்ந்து ஏதோ மந்திரம் உச்சரித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். உடனே அவனுடைய ஆர்வம் மீண்டும் கொழுந்து விட்டெரிய, அவன் அவரை அணுகினான்.



கண் விழித்து அவனை நோக்கிய சாமியார் "உன் பெயர் சந்திரன் தானே!" என்று கேட்டதும் வியப்புற்றான். "சாமி! என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அவன் ஆவலுடன் கேட்க, அவர், "எனக்கு எல்லா வித்தைகளும் தெரியும். அதனால் உன் பெயரைக் கண்டு பிடிப்பது அவ்வளவு ஒன்றும் சிரமமில்லை!" என்றார்.

"அப்படியானால் உங்களுக்குத் தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் வித்தை தெரியுமா?" என்று சந்திரன் ஆவலுடன் கேட்க, அவர் தெரியுமென்றார்.

உடனே, அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கிய சந்திரன், "சாமி! தயவு செய்து அந்த வித்தையை எனக்குக் கற்றுத் தாருங்கள்!" என்று மிகவும் கெஞ்சினான்........ *(தொடரும்)*

## 04.2015 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 1814 - நெப்போலியன் முதற்தடவையாக முடி துறந்தான்.
- 1850 - இங்கிலாந்தின் கொட்டன்ஹாம் என்ற ஊரின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப் படைகள் வேர்ஜினியாவின் ரிச்மண்ட் நகரைக் கைப்பறறிய அடுத்த நாள் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூட்டமைப்பின் தலைநகருக்கு விஜயம் செய்தார்.
- 1866 - ரஷ்யாவின் இரண்டாம் அலெக்சாண்டர் கீவ் நகரில் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பித்தான்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவத்தினர் ஹங்கேரியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.
- 1949 - பன்னிரண்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஒருங்கிணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின.
- 1968 - அமெரிக்காவின் கறுப்பினத் தலைவர் மார்ட்டின லூதர் கிங் டென்னிசி மாநிலத்தில் கொலை செய்யப்பட்டார்.
- 1968 - அப்பல்லோ 6 விண்கப்பல் நாசாவினால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1969 - டெண்டன் கூலி என்பவர் உலகின் முதலாவது தற்காலிக செயற்கை இதயத்தைப் பொருத்தினார்.
- 1973 - உலக வர்த்தக மையம் நியூயோர்க் நகரில் நிறுவப்பட்டது.
- 1975 - மைக்ரோசாப்ட் நிறுவனம் பில் கேட்ஸ் மற்றும போல் அலென் ஆகியோரின் கூட்டில் தொடங்கப்பட்டது.
- 1975 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அநாதைக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற அமெரிக்க விமானம் வீழ்ந்து நொருங்கியதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1976 - இளவரசர் நொரொடோம் சிஹானூக் கம்போடியா தலைவர் பதவியில் இருந்து விலகினார். இவர் பின்னர் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார்.
- 1979 - பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி சுல்பிக்கார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.
- 1983 - சலேஞ்சர் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 1999 - பாப்பரசரின் வேண்டுகோளையும் புறக்கணித்து நேட்டோ வான்படைகள் உயிர்த்த ஞாயிறு நாளன்று முன்னாள் யூகொஸ்லாவியா மீது குண்டுகளை வீசின.
- 2002 - அங்கோலாவின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அங்கோலா அரசும் யுனிட்டா போராளிகளும் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

### பிறப்புகள்

- 1855 - மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை, தமிழ் அறிஞர். (இ.1897)
- 1976 - சிம்ரன், இந்தியத் திரைப்பட நடிகை.

### இறப்புகள்

- 1841 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9ஆவது ஜனாதிபதி (பி. 1773)
- 1929 - கார்ல் பென்ஸ், பெறறோலினால் இயங்கும் ஊர்தியைக் கண்டுபிடித்த ஜேர்மனிய வாகனப் பொறியியலாளர், (பி. 1844)
- **1968 - மார்டடின் லூதர் கிங், கறுப்பினத் தலைவர். (பி. 1929)**
- 1979 - சுல்பிகார் அலி பூட்டோ, பாகிஸ்தான் ஜனாதிபதி [illegible]
- 1990 - [illegible]



### கறுப்புக் காந்தி மார்ட்டின் லூதர் கிங்

மார்ட்டின் லூதர் கிங் 1929, ஜனவரி 15 ஆம் திகதி அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் பிறந்தார். இவருடைய தந்தை மார்ட்டின் லூதர். தாயார் அல்பெர்டா ஆவார். ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க-அமெரிக்கத் தலைவர். அவர் காந்தியவழியில் சிறந்த வன்முறையற்ற அறப்போராட்டத்தைப் பயன்படுத்தியவர். மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க முற்போக்கு வரலாற்றில் ஒரு தேசிய சின்னமாகக் கருதப்படுகிறார். பாப்திசுதப் போதகராக இருந்த கிங் தனது இளமைக்காலத்திலேயே சமூக உரிமைவாதியாக இனங்காணப்பட்டார். 1962 இல் அலபாமாவில் நடந்த வன்முறையற்ற வழியில் இவர் நடத்திய அறப்போராட்டம் பலரது கவனத்தை ஈர்த்ததுடன் தேசிய அளவில் புகழ்பெற்றது.

கிங் 1963 இல் "வேலையும் சுதந்திரமும் வேண்டி வோஷிங்டனுக்கு பேரணி" என்ற மிகப் பெரிய பேரணிக்கு ஏற்பாடு செய்தார். பெருமளவில் மக்கள் திரண்டனர். இங்குதான் அவர் தனது "எனக்கொரு கனவு" என்ற புகழ்பெற்ற சொற்பொழிவினை ஆற்றினார். அமெரிக்க வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதன் பறகு அமெரிக்க உளவுத்துறை ஒக்டோபர் 14, 1964 ஆம் ஆண்டில் வன்முறையற்ற வகையில் நிறவெறிக்கெதிராக பாடுபட்டதற்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

காந்தியடிகளின் அறப்போராட்ட வழியில் ஈர்க்கப்பட்ட மார்ட்டின் லூதர் கிங் டென்னசியில் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் திகதி சொற்பொழிவிற்காக ஒரு விடுதியில் தங்கியிருந்தபொழுது ஒரு வெள்ளையினத் தீவிரவாதி லூதர் கிங்கை துப்பாக்கியால் சுட்டான். அந்த இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது 39.

மார்ட்டின் லூதர் கிங்கின் மறைவிற்கு உலகமே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. அவரை கறுப்பு காந்தி என்றும் அழைத்தது. மார்ட்டின் லூதர் கிங் நினைவாக அமெரிக்காவில் ஜனவரி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை "மார்ட்டின் லூதர் கிங் தினம்" என்று அனுசரிக்கப்பட்டு அன்று அமெரிக்கா முழுவதும் விடுமுறை நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**...மண்ணின் மைந்தர்**

தொடக்கத்தில் ரஜினிகாந்த் பேசும்போது தனது தந்தை தமிழகத்தில் கிருஷ்ணகிரி அருகில் உள்ள நாச்சிக்குப்பத்தில் பிறந்தவர் என்று கூறினார். அதைக் குறிப்பிட்டு அதற்கு பின்பு இங்கே பேசிய நண்பர் வாழப்பாடி ராமமூர்த்தி, ரஜினிகாந்த் எனது கிருஷ்ணகிரி தொகுதியைச் சேர்ந்தவர். அதனால் எங்களுடைய 'மண்ணின் மைந்தர்' என்று குறிப்பிட்டு பேசினார்.

மண்ணின் மைந்தர் என்ற கொள்கையை அகில இந்திய காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொள்வதில்லை. ஆனாலும் வாழப்பாடி ராமமூர்த்தி மண்ணின் மைந்தர் என்று சொன்னதை கேட்டதும் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய கணியன் பூங்குன்றனார் நினைவுக்கு வருகிறார். அவரும் தான் பிறந்த ஊரை தனது பெயருடன் சேர்க்க தவறியதில்லை. அதனால் மண்ணின் மைந்தர்கள் என்று சொல்வதில் நியாயம் உள்ளது.

**ஏழைகள் திருமணம்**

ஏழை, எளியோருக்கும் திருமணம் நடத்த இங்கே இடம் அளிக்கப்படும் என்று ரஜினிகாந்த் கூறியது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது.

இது எனது குடும்ப விழா. இதில கலந்து கொள்வதில் மீண்டும் எனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்'


இவ்வாறு கருணாநிதி கூறினார்.

**ரஜினிகாந்த் பேச்சு**

தொடக்கத்தில் ரஜினிகாந்த் பேசுகையில் கூறியதாவது:-

'என்னைப் பற்றிச் சொல்வார்கள் 'கன்னடக்காரன், தமிழ்நாட்டுக்கு

97



வந்திருக்கிறான்' என்று. உண்மைதான். ஆனால் ஆராய்ந்து பார்த்தால், அதில் இன்னும் சில விடயங்கள் தெரியவரும்.

எங்களுடைய பூர்வீகம் கிருஷ்ணகிரி. என் தந்தை கிருஷ்ணகிரியிலுள்ள நாச்சிக்குப் பம் கிராமத்தில் பிறந்தவர், வாழ்ந்தவர். கிருஷ்ணகிரி தமிழ்நாட்டில் உள்ளது.

நான் தெய்வமாக வழிபடும் ஸ்ரீராகவேந்திரா சுவாமி, ஒரு தமிழர். ஆன்மீகத்தில் நான் குருவாக வழிபடும் ரமணமகரிஷி ஒரு தமிழர்.

சிவாஜிராவாக இருந்த எனக்குப் பெயர் சூட்டி, தமிழ் கற்றுத்தந்து, எனக்கு மறு வாழ்வு கொடுத்து, என்னைத் தத்தெடுத்து அறிமுகப்படுத்திய கே.பாலசந்தர் அவர்கள் தமிழர்.

ஆரம்பத்திலிருந்தே என்னைச் சினிமாவில் சேரச்சொல்லி ஊக்கப்படுத்திய என் ஆப்த நண்பர் ராஜ்பகதூர் தமிழன்.

வாழ்நாள் முழுவதும் துணை வருவதாகக் கூறி, என் வீட்டில் விளக்கேற்றிய என் மனைவி லதா ஒரு தமிழச்சி.

என் குழந்தைகள் வாய் திறந்தவுடன் பேசிய முதல் வார்த்தை, தமிழ.

**உயிரினும் மேலான**

**தமிழ் ரசிகர்கள்**

எனக்கு அன்பையும், ஆதரவையும் அள்ளிக்கொடுத்து, என்னை இந்த நிலைக்கு உயர்த்தியிருக் கும் என் உயிரினும் மேலான ரசிகப் பெருமக்கள் தமிழர்கள்.

அப்படியென்றால் நான் யார்? நீங்களே சொல்லுங்கள்." இவ்வாறு ரஜினிகாந்த் குறிப்பிட்டார்.

**பாலசந்தர்**

ரஜினியின் குருவான டைரக்டர் பாலசந்தர், குத்துவிளக் கேற்றி வைத்துப் பேசினார்.

விழாவில் சிவாஜிகணேசன், ஆர்.எம்.வீரப்பன், தமிழ்நாடு இ.காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, பட அதிபர் ஏவி.எம்.சரவணன், பட அதிபரும் கதை வசனம் பாடல் ஆசிரியருமான பஞ்சு அருணாசலம், இசை அமைப்பாளர் இளையராஜா, எழுத்தாளரும், நடிகருமான சோ, ரஜினிகாந்தின் அண்ணன் சத்திய நாராயணராவ் கெய்க்வாட், ரஜினிகாந்த் பெங்களூரில் பஸ் கண்டக்டராக இருந்தபோது அவருடன் 5 ஆண்டுகள் பஸ் டிரைவராக இருந்து பணியாற்றியவரும், ரஜினிகாந்த் திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படித்து முன்னேற உதவி செய்தவருமான ராஜ்பகதூர் ஆகியோர் பாராட்டிப் பேசினார்கள்.

முதலமைச்சர் கருணாநிதி மற்றும் விழாவில் பாராட்டுரை நிகழ்த்திய அனைவருக்கும் ரஜினிகாந்தின் மனைவி லதா மலர்க் கொத்து வழங்கி வரவேற்றார்.

விழாவுக்கு வந்தவர்களை டைரக்டர் எஸ்.பி.முத்துராமன், நடிகர்கள் ஒய்.ஜி.மகேந்திரன், விஜயகுமார், அகில இந்திய ரஜினிகாந்த் நற்பணி மன்ற தலைவர் சத்யநாராயணா ஆகியோர் வரவேற்றனர்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து– 108

**...பூ**லித்தேவன் காயை இறுக்கிப் புடிச்சான் கட்டையன்; தொங்கு சவ்வுல சரடு கட்டி இறுக்கி ஒரு முடிபோட்டான். காய ஒரு கையில புடிச்சுக்கிட்டு மறுகையில நெரி நெரின்னு நெரிச்சான்; கும்மு கும் முன்னு கும்முனான். ஒரு சின்னக் கல் ஒலக்கைய எடுத்து ஒரு பக்கமா நச்சு நச்சுன்னு குத்தினான்.

பை இருக்க படக் படக்குன்னு ஒடையுது உட்சவ்வு. உசுறு போற வலியில கதறுது பாவம் வாயில்லாத சீவாத்தி.

மறுகாயும் அடிச்சான்; உட்சவ்வு ஒடைச்சான். கல் ஒலக்கைய வச்சுக் காயில பொய்க்குத்தாக் குத்திக் கெட்டியா இருந்த காயப் பிதுக்கிப் பிதுக்கி நசுக்கி நசுக்கிக் குறுண குறணையா ஆக்கிக் கூழாக்கிட்டான்.

கூழ் தண்ணி தண்ணியா ஆகுற வரைக்கும் கச கச கசன்னு கசக்குறான். என்னிய விட்டுருங்க என்னிய விட்ருங்கன்னு ஆட்டு மொழியில கத்துது ஆவி துடிக்கிற சீவன்.

கட்டியாயிருந்த காயி தண்ணிப் பையாத் தொங்க ஆரம்பிச்சதும் அடிப்பாகத்துல தேங்குன தண்ணிய மேல ஏத்தி முடிச்சுப் போட்டு விட்டுட்டு; தண்ணிய அள்ளி, சப்புச் சப்புச் சப்புன்னு அடிச்சான் குத்திக் குத்திக் கூழாப்போன காய்மேல.

விட்டுட்டேண்டி; இன்னைக்கிந்து நீ பூன.



இப்ப விட்ருங்கடா எல்லாரும் விட்டு விலகிட்டாங்க. புலியாமில்ல புலி...

எந்திரிக்கத் தெம்பில்லாம விழுந்து கெடக்குற பூலித்தேவன் அவன காயடிச்சு வெறிச்சு ஒரு பார்வ பாக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கண்ணுலருந்து கண்ணீரும் ஆண்மையும் ஒண்ணு சேந்து வடிஞ்சு ஒழுகிற மாதிரியே இருக்கு.

மசுங்குன இருட்டுல ஓடியாந்த கொண்ணவாயன், தலையிலயும் நெஞ்சுலயும் அடிச்சுக்கிட்டுக் கட்டிப் புடிச்சு அழுகிறான் காயடிச்ச கெடாய.

மூணு நாளைக்கு எரையெடுக்காது காயடிச்ச கெடா. புல்ல மோந்தும் பாக்காது; புளிச்ச தண்ணியில வாயும் வைக்காது.

பூலித்தேவன் கொம்புல தலையச் சாச்சு, தாடையத் தடவிக்கிட்டே அது அழுகிறதப் பாத்து அழுகிறா கருவாச்சி. மானங்கெட்ட பயலுகளாச் சேர்ந்து ஒன்னிய ஊனப்படுத்திட்டாங்களே பூலித்தேவா! அவ அழுக, ஆடு அழுக, என்னமோ ஏதோன்று பிள்ளையும் சேந்தழுக, கொண்ணவாயனும் கூடவே அழுக, பாதி எழவு வீடாகிப்போச்சு கருவாச்சி வீடு.

காயடிக்கிறது ஒண்ணும் புதுசில்ல; ஊர்நாட்ல உள்ளதுதான்; கெடா வர்க்கத்துக்கு மனுசன் வழிவழியாச் செங்சு வந்த துரோகந்தான். ஆனா, அதுக்கும் ஒரு கணக்கு இருக்கு.

ஆறே மாசத்துல வயசுக்கு வந்திருது கெடா. காலும் தலையும் மத்தமும் நீண்டு நிமிந்திருது. பொலிச்சல் நெனப்பு வந்துட்டா அப்புறம் அதப் புடிக்க முடியாது கையில.

(தொடரும்)

## சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-39

# காலநிலை மாற எமக்குள்ளும் மாற்றம் வேண்டும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்



**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உணவுக்குப்பஞ்சம் வரப்போகின்றது என பலவழிகளில் பலரும் எடுத்துரைத்துக்கொண்டிருக்கின்றார்கள். உலக உணவு தாபனம் இந்த அவசர அழைப்பை மக்களின் உணவுத்தேவையை கருத்தில் கொண்டு எடுத்துரைத்திருக்கின்றது. எமது உணவுத் தேவைக்கு நாமே பயிருற்பத்தி செய்ய வேண்டும் என்னும் நிலை வந்திருக்கின்றது. ஏனெனில் வழக்கமாக வெளிநாடுகளை நம்பியிருந்து பழககப்பட்ட நாங்கள் எமது முழு உணவுத் தேவையையும் நாமே பூர்த்தி செய்ய வேண்டும் என்னும் நிலையை அடையும் போது வியக்கின்றோம். ஆனால் அதுதான் உண்மை. இந்ததேசம் ஒரு வளமான பூமி. அதில் உள்ள வளங்கள் அனைத்தையும் நாம் இனங்கண்டு கொண்டால் அந்த வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்த எம்மை தயார்ப்படுத்திக் கொள்ளமுடியும். எமது பாதகமான செயல்களால் கிடைக்கின்ற வளங்களை நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியாது போய் விடுகின்றது. அழிவுக்கான தயார்ப்படுத்தலில் காட்டுகின்ற அவசரத்தை ஆக்கத்திற்கு நாம் காட்டுவதில்லை. மனவுளைச்சலில் மூழ்க முந்திக்கொண்ட ஒருவர் அழிவுக்கு காட்டும் கரிசனை ஆக்கத்திற்கு இருப்பதில்லை. முன்னைய காலங்களைப் போலல்லாது தற்போது காலநிலையும் திடுதிப்பென மாறிக்கொண்டேயிருக்கின்றது. இந்த மாற்றத்தை நாம் அனுசரித்து சென்றாலொழிய அதிலிருந்து விடுபட எம்மால் முடியாது. பெருகிவரும் சனத்தொகைக்கு உணவூட்டலென்பது உணவுற்பத்தியைப் பலமடங்கு பெருக்குவதிலேயே தங்கியிருக்கின்றது. அத்துடன் நின்றுவிடாது விளைநிலத்தில் உற்பத்தி செய்யப் பட்ட பொருள் சேமிக்கப்படும் வரையிலும் சேதமில்லாது கொண்டு செல்லப்படவேண்டும். உற்பத்தி செய்வதிலும் பார்க்க சேமிப்பதிலும் சந்தைப்படுத்தலிலும் தான் அதிகமாக சேதமேற்படுவதாக ஆய்ந்தறிந்துள்ளனர். குறிப்பாக தானியங்களின் உற்பத்தியில் இந்த தகவல் நம்பகமாக இருப்பதாகவே தோன்றுகின்றது. நடுத்தர வருமானமுள்ள நாடான இலங்கையில் சேமித்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் இன்னும் தொழில்நுட்பத்தின் உள் வருகை அவசியம் தேவைப்படுவதனை உணர்ந்தறியலாம். இவற்றுடன் உற்பத்தியாகும் பயிருணவுப் பொருட்கள் வெறுமனே உணவு என்பதற்கு மேலாக நிறையுணவை தரக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த நிறையுணவின் தரக்குறைவு காரணமாகவே பிறக்கின்ற குழந்தைகள் நிறைகுறைவாகவும் இன்னும் பலகுறைகளுடனும் இருப்பதாக அண்மைக்கால தரவு சுட்டிக்காட்டுகின்றது. இந்த விடயத்தினை மேம்படுத்துவதறகாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கான போசாக்கு உணவுத்திட்டம் வரவேற்பினைப் பெற்றுக் கொள்கின்றது. இந்த திட்டத்தின் தோற்றுவாயாக முழுமையான சத்துணவினை உட்கொள்ளாமையும் உண்ணும் உணவின் தன்மையும் அமைந்து விடுகின்றது. உணவுப்பழக்க வழக்கத்தை மாற்ற முடிந்தால் இதற்கான தீர்வை விரைந்து கண்டிடலாம். ஆனால் எமது மக்களின் உணவுப் பழக்கத்தை விரைந்து மாற்றிவிட முடியாது. மாற்றத்தை ஏற்படுத்த முடியாவிட்டால் நாம் மனிதகுலம் என்பதற்கு அருகதையற்றவர்களாவோம்.

எமது வழக்கமான உணவு என்பது கோதுமைமாவும் அரிசி மாவைவும் பயன்படுத்தி செய்யப் பட்டபொருட்களாகும். தற்போது அநேகமானவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான காரணமாக கோதுமையும் அரிசியும் அதி களவு உட்கொள்வதாகவே இருக்கின்றது. சோறு, பிட்டு, இடியப்பம், தோசை, இட்லி, ரொட்டி என உணவகங்களில் நிரம்பியிருக்கும் உணவு வகைகளில் நீரிழிவு நோயாளிகளுக்கான உணவு என எதனையும் காண முடியாது. குறிப்பாக எண்ணெய்ப் பாவனை கவலைக்கிடமாகவே இருக்கின்றது. ஒரே எண்ணெயில் மாறிமாறி உணவுகளை பொரித்தெடுப்பதனால் கொலஸ்திரோல் இவ்வுணவினூடாக அதிகரிக்க வாய்ப்புக்கள் அதிகம். றோல்ஸ், சமோசா, போண்டா, பஜ்ஜி, வடை, மிதிவெடி என பலதும் கோதுமைமாவை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுவதனால் காபோவைதரேற்றும் கொழுப்பும் அதிகமாகவே எமது உடலில் உட் செல்ல காரணமாகின்றது. அநேகமான விழாக்களில், நிகழ்வுகளில் மற்றும் கூட்டங்களில் இவ்வகை உணவுகளை பரிமாறுவதை தவிர்த்து நீரிழிவு மற்றும் இதய நோயுள்ளவர்களுக்கான உணவுகளை பரிமாறுவதும் அதற்கான உணவுகளை பெற்றுக்கொள்ளும் உணவகங்களை இனங் காணுவதும் இங்கே அவசியமாகின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXVI

காலநிலை மாற்றம் என்பது பரவலாக எமது பிரதேசத்தில் உணரத்தலைப்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் காணப்பட்ட வரட்சி இதற்கான ஒரு குறியீடு எனக் கூறலாம். இந்த வரட்சி எமது பிரதேசத்திற்கோ அல்லது எமது நாட்டிற்கோ தனிப்பட்டதல்ல. உலக நாடுகள் அனைத்துமே காலநிலை மாற்றத்தை உணர்கின்றன. இதனால் பல விளைவுகள் இன்னும் அழிவுகளை ஏற்படுத்துகின்றன. உணவு நெருக்கடியென்பது உலகளாவிய பிரச்சினையாக உணரத்தலைப் பட்டதிலிருந்து நாம் அதுசார்ந்த பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது. இதில் உலக மக்களனைவரும் ஒன்றுபட்டு திட்டமிட்டு உழைத்தலின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கின்றது. ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி உலக சுகாதார தாபனத்தினால் உலக சுகாதாரதினமாக பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்றது. "பண்ணையிலிருந்து கோப்பைக்கான உணவை சுகாதாரமானதாக பாது காப்போம்" (From farm to plate, make food safe) உலகளாவிய ரீதியில் உணவின் மூலமாக பரவும் ஏறக்குறைய 200 நோய்கள் வயிற்றோட்டத்திலிருந்து புற்று நோய் வரை அவற்றின் தாக்கத்தை உணர்ந்திருக்கின்ற உலக சுகா தார நிறுவனம் இந்நோய்கள் எதிர்பாராதவாறு அதிகரித்திருக்கின்ற நிலையில் சிறந்த சுகாதாரமான மற்றும் நிறையுணவினை ஒவ்வொருவரும் உட்கொள்வதற்கான முன்னெடுப்புக்களை பலவழிகளிலும் எடுத்திருக்கின்றது. உணவின் மூலமாக நோய்கள் பரவுதலில் அரைவாசி சமைக்கப்பட்ட இறைச்சி, நன்றாக பழுக்காத இரசாயனத்தால் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள், பீடைநாசினிகள் தெளிக்கப்பட்டு நஞ்சுடன் விற்கப்படும் மரக்கறி வகைகள், விலங்குகளின் சிறுநீர் மற்றும் மலக்கழிவுகள் கலக்கப்பட்ட உணவுப் பொருட்கள் இன்னும் பூஞ்சண தொற்று ஏற்பட்ட உணவுப்பொருட்கள் என்பவை காரணமாக இருக்கின்றன. குறிப்பாக எலி போன்றவற்றின் சிறுநீர் மற்றும் மலக்கழிவுகள் என்பன இவ்வாறான கிருமி தொற்றுதலுக்கு ஏற்புடையனவாக இருக்கின்றன. இந்த கிருமி தொற்றுதலில் பங்கசு, பக்ரீறியா, வைரஸ் மற்றும் றிக்கெற்சியா போனற நுண்ணங்கிகள் முக்கியமானதாக இருக்கின்றன. இந்த தொற்றுதலுக்கு காலநிலையும் முக்கிய காரணமாக இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிகமான வெப்ப நிலை இதில் நேரடியாக சம்பந்தப் பட்டிருக்கின்றது. இந்த உணவுப் பாதுகாப்பு பற்றிய ஆய்வு உலக சுகாதார நிறுவனத்தால் ஆரம்பிக் கப்பட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நிறைவடைந்த பின்னர் அதனது முடிவுகள் எமக்கு தெரிய வரும். ஆனாலும் இதுவரை பெறப்பட்டஆய்வின் முடிவுகளில் பின்வருவன கண்டறியப்பட்டுள்ளன.



உணவினை உட்கொள்வதினால் உருவாகும் நோய்களில் 22 வெவ்வேறு வகையானவை 282 மில்லியன் நோயாளிகளில் காணப்பட்டன. இவற்றில் 3 இலட்சத்து 51 ஆயிரம் இறப்புக்கள் இந்நோய்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றுள் உள்ளக நோய்களின் முக்கிய காரணிகளாக சல் மேனெல்லாரையினால் 52 ஆயிரம் இறப்புக்களும், உள்ளக நோய்க்கியான எஸ்செரிச்சியா கோலியினால் 37 ஆயிரம் இறப்புக்களும், நோறோ வைரசினால் 35 ஆயிரம் இறப்புக்களும் என அண்ணளவாக கணக்கிடப்பட்டுள்ளன. ஆபிரிக்க கண்டத்திலேயே அதிகமான இறப்புக்களும் அதற்கடுத்ததாக தென்கிழக்கு ஆசியாவில் அதிகமென கண்டறியப்பட்டுள்ளது. இந் நோய்கள் பீடிக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய 40 சதவத்திற்கு அதிகமானவர்கள் 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகளாக இருப்பதாக அறிய முடிகின்றது. எஸ்செரிச்சியா கோலி என்னும் பக்ரீறியா தொற்றினால் ஜேர்மனியில் 2011 ஆம் ஆண்டில் 130 பில்லியன் ரூபாக்கள் இழப்பும, தொழிற்சாலைகளில் 23 ஆயிரத்து 600 பில்லியன் ரூபாக்கள் இழப்பும் ஏற்பட்டதாக அறிய முடிகின்றது. இந்த பக்ரீறியா மலக்கழிவில் காணப் படுவதென்பது பலருக்கு தெரி யாது. இங்கும் கிணற்றினை கழிவறையிற்கு அண்மையில் அமைப்பதனால் இந்த மலக்கழிவு கிருமி தொற்று ஏற்படுவதாக நம்பப்படுகின்றது. நாம் அருந்தும் குடிநீரில் இந்த தொற்று இருப்பதனால் பலவகையான நோய் உபாதைகளுக்கு நாமும் உள்வாங்கப்படுகின்றோம்.

காலநிலைமாற்றம் எமது சூழலில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியிருப்பது எமக்கு புரிய வில்லை. இந்த மாற்றம் பற்றிய அறிவு முழுமையாக எமக்கு கிடைக்கும் போது எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள அதீத பிரயத்தனம் எடுக்க வேண்டியிருக்கும். தெருவோரம் விற்கப்படும் உணவுப் பொருட்கள் சுத்தமானதாக இருக்க வேண்டும். தெருவோரம் கட்டாக்காலிகளாக திரியும் நாய்களின் எச்சத்தால் அவை காய்ந்தபின் வாகனங்களின் விரைவான அசைவினால் அவை தூசுத்துணிக்கைகளாக உயர்ந்தெழுந்து தெருவோர உணவில் அமைதியாக அமர்ந்து விடும். அதனை நாமும வாங்கி சுவைத்துண்டபின் பிரச்சினை ஆரம்பமாகின்றது. எப்படி எங்கிருந்து வந்ததென்பதை கண்டறிய வைத்தியரும் பலசோதனைகளை செய்து செலவும் செய்து கண்டறிந்து தீர்வுகாண வேண்டியிருக்கின்றது. வருமுன்காப்போம் என்பது எமது முன்னோர்கள் சொல்லி வைத்த செய்தி. அதனை நன்றாக வாயால் சொல்லிக் கொள்கினறோமே தவிர செயலில் காட்டவில்லையே என்ற ஆதங்கத்தையும் இதில் பதிவு செய்ய வேண்டியிருக்கின்றது. மாநக ராட்சியின் பிரதேசசபைகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களையாவது சட்டத்தின் உதவியுடன் கட்டாக்காலி நாய்களை கட்டுப் பத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் நாய் வளர்ப்பவர்கள் அவற்றை கட்டி வளர்க்க வேண்டும். அவைகளின் இனப்பெருக்கத்துக்கான காலமிது என்பதால் அனைத்து நாய்களும் தற்போது பாதையில் நிற்கின்றன. நின்றால் பரவாயில்லை என்றால் அவற்றின் எச்சமும் எங்கிருந்தோ வந்து வீட்டுவாசலில் சிறுநீர் கழித்து மலமும் கழித்துச் செல்கின்றன. இவற்றை கட்டுப்படுத்த சட்டம் வராதோ என பலரும் ஏங்கியிருக்கின்றனர். நாய்க்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் மனிதனுக்கின்னும் இல்லை என்னும் முணுமுணுப்பும் இன்னும் கேட்டுக் கொண்டவாறேயிருக்கின்றது. எமது செயல்களை நாம் வரையறுக்காது, கட்டுப்படுத்தாது கால நிலையை குறைகூறி எதுவு மில்லை.

காலநிலை மாற்றம் பற்றி கல்வி இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதனது பாதிப்பு விவசாயத்தில, கால்நடை வளர்ப்பில், மீன்பிடியில் இன்னும் தொழிற்சாலையில் என பலவகையாக இருக்கின்றது.

இதுபற்றியும் அவை சார்ந்த தொழில்நுட்பங்கள் பற்றியும் அடுத்த வாரம் அலசுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெலே சுதாவுக்கு மே.7வரை மறியல்

**போதைப்பொருள் கடத்தல், விற்பனை போன்ற குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்படுள்ள வெலே சுதா என்ற கம்பல விதானகே சமந்த குமார எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் ஜராங்கனி பெரேரா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.**

இந்த வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு இலட்சம் ரூபா ரொக்கம் மற்றும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த வெலே சுதா நீதிமன்றத்தைப் புறக்கணித்து தப்பியோடியதால் இவரின் பிணைப்பணம் தற்போது நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கைதான இவர் இலங்கைக்குக் கொணடுவரப்பட்ட பின்னர் தடுப்பு உத்தரவின் பேரில் இரகசியப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் இவர் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இரகசியப் பொலிஸாரால் கொழும்பு மேல்நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டார்.

இந்த வழக்கில் இரண்டாவது குற்றவாளியாகக் கொளளப்பட்டிருக்கும் அமில என்பவர் மரணித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருப்பதால் அதனை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி முறைப்பாட்டாளருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டார். (இ-5)

# நாடாளுமன்றத்துக்கு வர காரணங்கள் இல்லை

## மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்குள் வருவதற்கு தற்போது எந்தக் காரணங்களும் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பல உறுப்பினர்கள் தமது ஆசனத்தை விட்டுத் தருவதாக கூறியுள்ள போதும் தாம் இன்னும் அதனைப் பற்றி யோசிக்கவில்லை என்று ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டியில் சட்டத்தரணிகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே மகிந்த இதனை தெரிவித்தார்.

தாம், அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை கண்காணித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் அரசாங்கம் தம்முடன் பணியாற்றியவர்களை விசாரணை செய்து ஊடக கண்காட்சியை நடத்துவதாக மகிந்த ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார். (இ-5)

# இரண்டு சம்பளங்களை நான் பெறவில்லை-தில்ருக்ஷி

அரசாங்கத் திணைக்களங்கள் இரண்டில் ஏககாலத்திலும் கடமையாற்றி தான், இரண்டு சம்பளங்களை பெறவில்லை என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க, 2002 ஆம் ஆண்டு, அரசாங்க திணைக்களங்கள் இரண்டில் சம்பளம் பெற்றார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

அவர், தனது முறைப்பாட்டை, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தவிசாளர் டி.ஜே. டி.எஸ் பலப்பட்ட பெந்தியிடமே கையளித்திருந்தார்.

பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க, சட்டமாதிபர் திணைக்களத்திலும் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிலும் ஏககாலத்தில் கடமையாற்றினார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 40 | 40 | 30 | 20 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 90-100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 60 | 40-50 | 40 |
| தக்காளி | 60 | 60 | 50 | 50 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 60 | 60 | 40 | 40 |
| கரட் | 200 | 120 | 110 | 120 | 100-120 | 120 |
| பூசணி | 50 | 40 | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 80-100 | 40-60 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 140 | 100 | 80 | 60-100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 500 | 50 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 | 40 | 40-60 | 40 |
| லீக்ஸ் | 200 | 140 | 150 | 200 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 60 | 40 | 50 |
| கறிமிளகாய் | 200 | 100 | 130 | 60 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 350 | 320 | 400 | 400-500 | 400 |
| போஞ்சி | 200 | 80 | 100 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 30 | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 70 | 120 | 80 | 60 | 60-80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 60 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 120 | — | — | — | 80 |
| முள்ளங்கி | 20 | 20 | 40 | 60 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 40 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 331

இலக்கியா நகுலன்

வாழ்க்கை புத்தகத்தில்
முதல் பக்கம் கருவறை
கடைசி பக்கம் கல்லறை
இடையில் உள்ள
பக்கங்களை
புன்னகையால் எழுது
கண்ணீரால் நனைக்காதே.... -

ருச்சி சிவகுமார்





தனு தனுசியா




பிரவின் தாஸ்




ராஜா தனு



தர்சன் கவிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

# மகிந்தவை விடவும் மைத்திரி சீனாவுக்கு வேண்டியவராகிவிட்டார்

சீனா தற்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது. சீனாவுக்கான அவரது பயணத்தைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்சவைவைவிட மைத்திரிபால சிறிசேன தனக்கு மிகவும் வேண்டியவர் என்பதை சீனா உணர்ந்துள்ளது.

துறைமுக நகரத் திட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தடையானது, சீனா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுமூகமான உறவைப் பாதிக்கலாம் என ஊடக ஆசிரியர் ஒருவர் சுட்டிக்காட்டிய போது, இந்திய மாக்கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளதால் எல்லா நாடுகளுடனும் நல்லதொரு உறவைப் பேண வேண்டியது இலங்கையைப் பொறுத்தளவில் இன்றியமையாத விடயமாகும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க விளக்கமளித்தார்.

ரணில் இக்கருத்தைத் தெரிவித்த போது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவில் தங்கியிருந்தார். சீனாவுக்கு மைத்திரிபால சிறிசேன பயணம் செய்தபோது இலங்கையில் சிறுநீரக வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தருவதாக சீனா வாக்குறுதி வழங்கியது. இது சீனர்களின் தந்திரோபாயமாக உள்ளது என்பதை வரலாறு கூறுகிறது.

1970-77 காலப்பகுதியில் இலங்கையை ஆட்சிசெய்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு, மறைந்த அவரது கணவரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ, ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவாக அமைக்கப்பட்ட, பண்டாரநாயக்க ஞாபகார்த்த அனைத்துலக மாநாட்டு மண்டபத்தை அன்பளிப்பாக வழங்கியது சீனா.

இதேபோன்று இலங்கையின் ஜனாதிபதியாக சந்திரிகா பதவி வகித்த போது, இவரது கணவரான பிரபல நடிகரான மறைந்த விஜய குமாரதுங்கவின் நினைவாக கலாசார அரங்கம் ஒன்றை நிர்மாணித்துத் தருவதற்கான விருப்பத்தை சீனா வெளிப்படுத்தியது.

இது பின்னர் நெலும் பொக்குன என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் திறப்பதற்கான வாய்ப்பை முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவே பெற்றிருந்தார்.

மகிந்தவின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில் சீனாவால் துறைமுகம் மற்றும் விமானநிலையம் போன்றன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போது, நாட்டின் வடமத்திய பகுதியில் சிறுநீரக நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இங்கே இந்நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய முழுமையான வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்துத் தருவதாக சீனா வாக்குறுதி வழங்கியுள்ளது.

இலங்கைத் தலைவர்களின் தேவைகள் என்ன என்பதை சீனா நன்கு அறிந்து வைத்துள்ளது என்பதையே சீனாவின் நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பரப்புரையின் போது வடமத்திய மாகாணப் பகுதியில் மிக எளிதாகப் பாதிக்கப்படும் சிறுநீரக நோய்களிலிருந்து மக்களைப பாதுகாப்பேன் என மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ஆகவே சீனா தற்போது மைத்திரிபாலவுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.



மைத்திரிபால சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து, மகிந்தவை விட மைத்திரிபால தனக்கு மிகவும் வேண்டியவர் என்பதை சீனா உணர்ந்துள்ளது.

ஏனெனில் மேற்குலகுடனும் இந்தியாவுடனும் மகிந்த ராஜபக்ச விரோதத்தை வளர்த்ததுடன் இவர் சீனாவின் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டார். தற்போது இந்தியாவுடனும் மேற்குலகுடனும மைத்திரிபால நல்லுறவைக் கட்டியெழுப்புவதன் காரணமாக, அவரைத் தனது பக்கம் இழுத்தெடுப்பதற்கான முயற்சியில் சீனா இறங்கியுள்ளது. மைத்திரிபால சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது சீனாவில் எவ்வாறான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இந்தியா கூர்ந்து அவதானித்தது.

மத்தள விமான நிலையத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு கட்டார் மன்னர் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சீனாவைப் போன்று தனது நிதியை அள்ளி வீசுவதற்கு இந்தியா தயாராக இல்லை. இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுடன் அமெரிக்காவின் ஊடாகப் போட்டியிடுவதென்பதே இந்தியாவின் திட்டமாகும்.

கட்டார் நாட்டின் மன்னர் அண்மையில் கொழும்பிற்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்தமை இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். மத்தள அனைத்துலக விமான நிலையத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான தனது விருப்பத்தை கட்டார் மன்னர் வெளிப்படுத்தியிருந்தார்.

மத்தள விமான நிலையம் சீனாவால் முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும். இது தற்போது நட்டத்தில் இயங்குகிறது. இங்கு தற்போது எவ்வித விமானங்களும் பறப்புக்களில் ஈடுபடுவதில்லை. இந்த நட்டத்தை இலங்கையால் ஈடுசெய்ய முடியாது என்பதன் காரணமாகவே கட்டார் அரசு இதனை குத்தகைக்கு எடுப்பதற்கான தனது ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

கட்டார் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாகும். தனது நாட்டிற்குச் சொந்தமான அல்- உடையிட் விமானத் தளத்தை அமெரிக்க விமானப்படையினர் பயன்படுத்துவதற்கான அனுமதியை கட்டார் வழங்கியுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தளவில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கட்டார் விமானத் தளம் மிகவும் பயனுள்ளதாகும்.

அமெரிக்காவின் ஆசியுடனேயே மத்தள விமான நிலையத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான தனது ஒப்புதலை கட்டார் வழங்கியிருக்கலாம்.

மத்தள விமான நிலையத்தை வேறு சில நாடுகள் குத்தகைக்கு எடுக்கத் தீர்மானித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரம் தொடர்பான சீனாவின் எண்ணம் என்பதை துல்லியமாக எதிர்வுகூற முடியவில்லை. எனினும், சீனாவுக்கான மைத்திரியின் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்து, இந்திய மாக்கடலில் உருவாக்கப்படும் எந்தவொரு சீனத் தளங்களும் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

இந்திய மாக்கடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதானது இந்தியா உட்பட பூகோள மற்றும் பிராந்திய நாடுகளுக்குப் பாதிப்பை உண்டுபண்ணும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவல் குறிப்பிட்டுள்ளார்.

உலக ஒழுங்கில் ஏற்படும் மாற்றமானது அனைத்துலக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும், இந்திய மாக்கடலில் சீனா தனது இராணுவத் தளங்களை உருவாக்குவதானது இப்பிராந்தியத்தின் அமைதிநிலையை நிச்சயம் பாதிக்கும் எனவும் டோவல் சுட்டிக்காட்டியுள்ளார்.

‘சீனா தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதானது யதார்த்தமாகும். இதன் மூலம் சீனா வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முற்படுகிறது. அத்துடன் வலுவான இராணுவ மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் விரிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

சீனாவின் வளர்ச்சி என்பது ஒரு வியத்தகு மாற்றம் என்பது உண்மைதான். சீனா எதைச்செய்தாலும் அது அனைத்துலக ரீதியாகப் பாதிப்பைச் சந்திக்கும் என்பதும் உண்மையாகும். இந்திய மாக்கடல் பிராந்தியமும் பாதிக்கப்படும். இந்தியாவும் இதனால் பாதிக்கப்படும். ஆகவே அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் விதமாக உலக ஒழுங்கில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என நாம் கருதுகின்றோம்’ என ‘The Growth Net’ என்கின்ற தலைப்பில் மூன்று நாட்களாக இடம்பெற்ற அனைத்துலக கருத்தரங்கில் டோவல் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஆண்டு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றதிலிருந்து சீனாவின் வழமைக்கு மாறான வளர்ச்சி தொடர்பாக டோவலால் முன்வைக்கப்பட்டுள்ள முதலாவது வெளிப்படையான உறுதியான கருத்தாக இது நோக்கப்படுகிறது.

இந்திய மாக்கடலில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பது தொடர்பாக மோடி அரசாங்கத்தின் கீழ் சீனாவுடன் மேற்கொள்ளப்படும் 18 ஆவது சுற்று சிறப்பு பிரதிநிதித்துவ மட்ட பேச்சுக்களை டோவல் தற்போது நிறைவு செய்துள்ளார்.

இந்திய மாக்கடலின் கரையோர பட்டுப் பாதை மூலோபாயம் தொடர்பான சீனாவின் கரையோர முயற்சிகள் தொடர்பாக வினவியபோது, இப்பிராந்தியத்தில் இராணுவத் தளங்களை அமைப்பதன் மூலம் இங்கே மோதல் நிகழ வழியேற்படாது என டோவல் பதிலளித்தார்.

‘1971 இல் ஐக்கிய நாடுகள் சபையில் இந்திய மாக்கடல் பிராந்தியமானது சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிராந்தியத்தை அமைதிமிக்கதாகத் தக்கவைத்துக் கொள்வதில் இந்தியா ஆர்வங்காண்பித்தது. கடல்சார் பாதைகளில் சுதந்திரமான போக்குவரத்து உறுதிசெய்யப்படும் என நாங்கள் நம்புவோம்’ என இந்திய மாக்கடலில் சீனாவின் இலட்சியங்கள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக இந்தியாவின் கருத்து என்ன என்பதை வினவியபோதே டோவல் இவ்வாறு பதிலளித்தார்.

தனது பட்டுப்பாதை மூலோபாயத் திட்டத்தின் முக்கியத்துவத்தை இலங்கை ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் போது, சீனா வலியுறுத்தியது. அதேவேளை, சீனாவின் மூலோபாயத்தைத் தோற்கடிப்பதற்கு, இந்தியா, அமெரிக்காவைப் பயன்படுத்த முயற்சிப்பது போல் தெரிகிறது.

இந்தநிலையில், இந்தியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்றும் இணைந்து ஏன் பணியாற்றக் கூடாது என சீன ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதியிடம் வினவியதாக இலங்கையின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்ததாக இந்திய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. இந்திய மாக்கடலில் அமெரிக்காவின் பிரசன்னத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்துகின்ற சீனாவின் திட்டமாக இது இருக்கலாம்.

**உபுல் ஜோசப் பெர்னான்டோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை இனவாத பேய்கள் ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றன!

## ஜயம்பதி விக்கிரமரட்ன குற்றச்சாட்டு



(கொழும்பு)

**இனவாதப் பேய்கள் இலங்கையை ஆக்கிரமிக்க முயற்சித்து வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார். நாடு பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்கும் நிலையை அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நுகேகொட, கண்டி மற்றும் இரத்தினபுரி போன்ற இடங்களில் கூடிக்குழுமிய இனவாதப் பேய்கள் நாட்டை மீளவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ள முயற்சிக்கின்றன.

நாடு விழுந்திருந்த அதள பாதாள நிலைமை குறித்து இனவாதப் பேய்கள் இன்று மறந்து விட்டன.

நாம் அனைவரும் அச்சத்துடனும், சந்தேகத்துடனும் வாழ்ந்த காலமொன்று இருந்தது.

நாம் எமது சொந்த தொலைபேசியில் அழைப்புக்களை ஏற்படுத்துவதில்லை, அவ்வாறான ஓர் நிலைமை காணப்பட்டது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினால் நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு பொருத்தமற்றவர் நியமிக்கப்பட்டதனால் நாடு எதிர்நோக்கிய ஆபத்தான நிலைமையை மக்கள் மறந்துவிடக்கூடாது.

ஆபத்தான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டியது அவசியமானது என ஜயம்பதி விக்கிரமரட்ன மேலும் தெரிவித்தார். (இ)

# குற்றவாளிகளைக் கைது செய்வதில் காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை

## பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்வதில் கால தாமதம் எற்படவில்லை என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வதில் ஏன் கால தாமதம் ஏற்பட்டுள்ளது என தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர்கள் பொலிஸாரிடம் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன்போதே அவ்வாறான எந்தவிதமான காலதாமதமும் ஏற்படவில்லை என பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதில ளித்துள்ளார்.

உரிய சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றால் சந்தேக நபர்களை கைது செய்வதில் எவ்வித காலதாமதமும் ஏற்படப் போவதில்லை. தற்போதைய அரசாங்க சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் கடமைகளை மேற்கொள்ள பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

எனவே குற்றவாளிகளை கைது செய்வதில் எவ்வித பின்னடைவும் ஏற்படப்போவதில்லை என பூஜித ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# குமாரின் நிகழ்ச்சி திடீரென இரத்து

இலங்கை அரசாங்கத்தின் தொலைக்காட்சியான ஐடிஎன்னில் நேற்று முன்தினம் ஒளிபரப்பாகவிருந்த அரசியல் நிகழ்ச்சி ஒன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

முன்னிலை சோசலிசக்கட்சியின் நிர்வாக உறுப்பினர் குமார் குணரட்னம் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கவிருந்தார். எனினும் இறுதிநேரத்தில் இந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளது.

கட்சித்தரப்பின் தகவல்படி குமார் குணரட்னத்தின் பேட்டி கடந்த சில நாட்களுக்கு முன்னரே பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரசியல் காரணமாகவே அது ஒளிபரப்படவில்லை என்று கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (இ-5)

# சு.க.ஆதரவு 19இற்கு இல்லையேல் பாராளுமன்றம் கலைக்கப்படுமாம்

## மனோ கணேசன் தெரிவிப்பு



19 ஆவது அரசியலமைப்புக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்காவிட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றிற்கு நேற்று கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய நிறைவேற்று சபை கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 19 ஆவது அரசியலமைப்பை எதிர்ப்பதற்கான வாய்ப்பு காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டம் பாராளுமன்ற விவாதத்திற்கு எடுத்து கொள்ளப்படும் போது ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்காவிட்டால் அக்கட்சி அரசியலமைப்பிற்கு எதிராக வாக்களிக்கும் சூழ்நிலை காணப்படுவதாக அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

குறித்த கட்சி உறுப்பினர்கள் சிலர் மகிந்த ராஜபக்ஷவுடன் இருக்கும் பட்சத்தில் அவர்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு மறைமுக மற்றும் நேரடியான எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கில் 19 ஆவது அரசியலமைப்பிற்கு எதிராக செயற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. இதனால் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஒட்டகம்

விலங்குகளில் ஒட்டகம் ஒரு வித்தியாசமான படைப்பு. தனித்தன்மைகள் பல அதில் இருக்கிறது. அதைப் பற்றி நுணுக்கமாக ஒரு விஞ்ஞானி ஆராய்ச்சி செய்தார். அமெரிக்காவில் இருக்கின்ற விஞ்ஞானப் பத்திரிகையான சயின்ஸ் டைஜிஸ்ட்ல அவர் ஓர் ஆராய்ச்சி கட்டுரையை எழுதினார். டால் ஸ்டீவன் சன் என்பது அவருடைய பெயர் தனது ஆராய்ச்சியை அவர் ஒட்டகத்தைப் பற்றி செய்வதற்கு என்ன காரணம் என்றால் ஒரு திருக்குறான் வசனம் தான் அதற்குக் காரணம் என்று அவரே சொன்னார்.

" இறைவனால் ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்த்து அறிந்து கொள்ள வேண்டாமா?" என்பது அந்த திருக்குறானுடைய திரு வசனம். இதுதான் அவர் ஒட்டகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கான அடிப்படையான காரணமாம். அந்த ஆராய்ச்சியில் பல நுட்பங்களை அவர் சொல்கிறார். முதலில் அதனுடைய உயர்தகு பாதங்கள் அதாவது தட்டையாகவும் பெரியதாகவும் அடிப்பாதங்கள் துவலக்கூடிய அளவிலும் இருக்கலாம். உதிரியான மணப்பரப்பில் எளிதாக நடக்கக்கூடிய அளவிற்கு அதனுடைய பாதங்கள் அமைந்திருக்கு. அடுத்தபடியாக அதனுடைய கழுத்து அது நீண்டு வளைந்திருக்கும். அதனால் தரையில் சில இடங்களில் முளைத்துக் கிடக்கும் புல்பூண்டுகள், குட்டிச்செடிகள் மேய்வதற்கு அது ஏதுவாக இருக்குமாம். அதேபோல மரத்தின் மேலே உச்சிக்கிளையில் இருக்கும் இலைகளைத் திண்பதற்கு இது வசதியாக இருக்குமாம். அதன்பின்பு அதனுடைய கண்கள் காற்றில் அடித்துவரும் மணலும் சுடும் வெயிலும் தாக்காத அளவிற்கு ஒட்டகத்தினுடைய கண்கள் மிக அருமையான முறையில் அமைக்கப்பட்டு இருக்கிறதாம். அதேபோல ஒட்டகத்தினுடைய இந்த மூக்கு அது தனித்தன்மை படைத்ததாம். மூக்கு துவாரங்கள் ஒடுங்கி விசேடமாக தசை நார்களால் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதனால் திடீரென கடும் காற்று கிளம்பி மண்ணை வாரி இறைக்குதென்று வைத்துக்கொள்ளுங்கள். தசைநார்கள் மூக்கை சுருக்கி அந்த மண் உள்ளே போகாமல் தடுத்து விடுமாம். அதேநேரத்தில் ஒட்டகம் மூச்சு விடுவதற்கும் ஓர் இடத்தை அது விட்டு வைக்கிறதாம். அவ்வளவு அற்புதமான வகையில் அந்த மூக்கு அமைந்திருக்காம்.

ஒட்டகங்களினுடைய உதடுகளுக்கு விசேடமானதொரு அமைப்பு இருக்கிறதாம். அதன் மேல்•உதடு பிளவுபட்டு மிக மிருதுவானதாகவும் உணர்ச்சியுடையதாகவும் இருக்குமாம். இதனால் மண்ணில் கிடைக்கக்கூடிய தானிய வகைகளை துருவித் தேடி எடுத்து அது உண்பதற்கு இது வாய்ப்பாக இருக்கும். அப்படியென்று அவர் அந்த ஆராய்ச்சியில் சொல்கிறார்.

பொதுவாக இரத்தத்தின் தன்மைக்கு சில குணாங்கள் உண்டு. ஆனால் ஒட்டகத்திற்கு மட்டும் இறைவன் தனித்தன்மை வாய்ந்த இரத்தத்தை கொடுத்திருக்கிறான். இதைத்தான் இவர் Science Daigestla எழுதுகிறார்.

மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள இரத்த அணுக்கள் வட்ட வடிவமாக இருக்கிறது. ஆனால் ஒட்டகத்தினுடைய இரத்த அணுக்கள் முட்டை வடிவமாக இருக்கிறது. அப்படியென்று இவர் கண்டுபிடித்து சொல்லியிருக்கிறார். மற்றதை விட இது கடினமாக வேற இருக்குமாம்.அதில் இருக்கிற சோடியம், பொட்டாசியம் இவையும் இன்னும் இருக்கிற இரசாயனப்பொருட்களும் ஒரு வித்தியாசமான அமைப்பில் இருக்கிறதாம். இதனால் ஒட்டகம் பல நாட்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தாலும் அதனுடைய குருதி தாரை அந்த இரத்த ஓட்டப்பாதை பாதிக்கப்படுவதில்லையாம். அதனால் தான் ரொம்ப நாட்கள் வரைக்கும் நீர் தேவையில்லாமல் ஒட்டகத்தால் பயணம் செய்யமுடியும் என்பதை நாம் நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஒட்டகத்தினுடைய முதுகில் ஒன்று அல்லது இரண்டு திமில்கள் இருக்கின்றன. இதில் ஏராளமான கொழுப்புச் சத்துக்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்காம். இந்த கொழுப்பில இருக்கிற இனிப்புப்பொருட்களை தண்ணீராக ஒட்டகத்தால் நினைத்த நேரத்தில் மாற்றிக் கொள்ள முடியும். இது ஒட்டகத்திற்கு இருக்கிற ஒரு சிறப்பான அமைப்பு. ஒட்டகத்திற்கு இருக்கும் இந்த சிறப்பான ஏற்பாட்டின் காரணமாகத்தான் தண்ணீர் கிடைக்காத பாலை வனத்தில் கூட அது நீண்ட தூரம் பயணம் செய்ய முடிகிறது.

பின்பு இன்னொரு அற்புதமான செய்தியொன்று சொல்கிறார்கள். ஒட்டகத்தை வேகமாக நடத்த வைக்க வேண்டுமென்றால் அதை அடிக்கிறதிற்கு ஒரு சாட்டையில் அதை குத்துகிறதற்கு தார்க்குச்சியோ தேவையில்லையாம். ரொம்ப ரம்மியமான பாடல்களை பாட ஆரம்பித்தாலே ஒட்டகம் நாங்கள் வேகமாக போக வேணும் என்று தன் எஜமான் விரும்புகிறார் என்று உணர்ந்து கொண்டு அந்த பாட்டைக்கேட்டு ரசித்துக்கொண்டே வேகமாக நடக்க ஆரம்பிக்குமாம்.

ஆக ஒட்டகத்தினுடைய உடலில் எவ்வளவு நுட்பமானதொரு அமைப்பு இருக்கிறது பார்த்தீர்களா. ஒட்டகமென்ற பேரிலேயே சில வேடிக்கைகள் நடப்பதுண்டு. ஒரு கம்பனியில் ஒரு மனேஜர் தன்னுடைய உதவியாளரைப் பார்த்து "ஒட்டகம் வாங்கிட்டு வாங்க" அப்படியென்றாராம். போனவர் ஐயா அது கிடைக்கவில்லையென்று திரும்பி வந்திட்டார். "என்ன சொல்ற நீ?" என்றார் மனேஜர். இல்லை, "நீங்க ஒட்டகம் வாங்கிட்டு வரச்சொன்னீர்கள் அது எங்கேயும் கிடைக்கவில்லை" என்றாராம் அவர். "அட அது இல்லை ஐயா. பேப்பரை ஒட்டனும் ஒட்டுறதற்கு கம்வேணும் வாங்கிட்டு வா அப்படியென்று தான் நான் சொன்னேன். ஒட்டகம் வாங்கி வரச் சொன்னால் நீ ஒட்டகமென்று நினைத்து விட்டாயா" அப்படியென்று கிண்டல் செய்தார் மனேஜர்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜெயலலிதாவின் மேல் முறையீட்டு மனு மீதான தீர்ப்பு எப்படி வேண்டுமானாலும் வரலாம். அவர் விடுதலையாகவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தீர்ப்பு எப்படி வந்தாலும், தமிழகத்தில் பெரிய மாற்றங்கள் நிகழாது"- அதிரடியாக ஆரம்பிக்கிறார் சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு.**

# ஜெயலலிதா விடுதலையாக வாய்ப்பு இருக்கிறது!

## உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பேட்டி




அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் ஊழல் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டால், அந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் ஆதரவைப் பெறக்கூடிய பலமான எதிர்க்கட்சி எதுவும் இங்கில்லை. காரணம், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி நீதிமன்றத்துக்கு நடையாக நடக்கிறார்கள்.

இங்கே, ஜெயலலிதாவின் மேல் முறையீட்டு மனு மீதான தீர்ப்பு எப்படி வேண்டுமானாலும் வரலாம். அவர் விடுதலையாகவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தீர்ப்பு எப்படி வந்தாலும், தமிழகத்தில் பெரிய மாற்றங்கள் நிகழாது ....

அவர் விகடன் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியின் சில முக்கியமானவை வருமாறு,

**தமிழகத்தில் நிழல் முதலமைச்சர், நிஜ முதலமைச்சர் என இரு முதலமைச்சர்கள் இருக்கிறார்களே?**

அரசியல் சட்டப்படி, ஆளுநருக்கு ஆலோசனை வழங்கக்கூடிய ஒரு முதலமைச்சரின் தலைமையில் அமைச்சரவை இயங்க வேண்டும். ஆனால், பல மாநிலங்களில் பலம் வாய்ந்த அரசியல் தலைமைகள் சிறைக் குற்றவாளி ஆக்கப்பட்ட பின், அவர்களது நெருங்கிய உறவினரை முதலமைச்சர் ஆக்கிவிட்டு கட்சி அலுவலகத்திலிருந்து ரிமோட் கன்ட்ரோலில் ஆட்சி நடத்தியதைப் பார்த்தோம்.

உதாரணம், பீகார். ஆனால், தமிழ் நாட்டில் மட்டும்தான் ஓர் அசல் முதலமைச்சரும் அவரது பின்னணியில் ஒரு நிழல் முதலமைச்சரும் செயற்படுவதைப் பார்க்கிறோம். ரிமோட் கன்ட்ரோலுக்குப் பதிலாக, பதவி விலகிய முதலமைச்சரின் நேரடி ஆட்சி வேறு எங்கும் நடைபெற்றது இல்லை.

**ஓ.பன்னீர்செல்வத்தின் ஆட்சி எப்படி உள்ளது?**

இந்த ஆட்சி, அரசியல் சட்டப்படி நடைபெறவில்லை. அரசியல் சட்டப்படி, பதவியில் அமர்த்தப்பட்ட முதலமைச்சர் இன்னும் செயற்படாதவராகவே உள்ளார். முதலமைச்சர் ஆசனத்தில் உட்காருவதற்கே இதுநாள்வரை தயக்கம் காட்டிய அவரால், எந்த வித முடிவையும் எடுக்க முடியவில்லை. அவரது கைகள் கட்டப்பட்டுள்ளன. மக்கள் முதல்வர், மக்கள் தலைமைச் செயலாளர், மக்கள் காவல் துறை அதிகாரி இவர்கள் கொண்ட குழுதான் இன்று தமிழகத்தில் ஆட்சி நடத்தி வருகிறது. இது பெரும் தவறு.

**தமிழக அமைச்சர்கள், அவர்களின் துறை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காட்டிலும், ஜெயலலிதா மீண்டும் முதலமைச் சராக வேண்டும் என பிரார்த்தனை செய்வதில் தான் கவனம் செலுத்தி வருகிறார்களே?**

இந்தியாவின் தலைசிறந்த வழக்குரைஞர்களை மிகுந்த பொருட் செலவில் அமர்த்தி வழக்கு நடத்திக் கொண்டிருக்கும் நிலையில் ஏன் இந்த ஏற்பாடுகள் எனத் தெரியவில்லை. அமைச்சரவை, எந்த முக்கிய முடிவையும் எடுப்பதில்லை. உதாரணமாக, சென்னை மெட்ரோ ரயில் திட்டம் முடிவடைந்து தயார் நிலையில் இருப்பதாகவும், ஜெயலலிதா வந்து தொடங்கி வைக்க வேண்டும் என்பதற்காகக் காத்திருப்பதாகவும் சொல்கிறார்கள்.

இதுபோல ஏராளமான திட்டங்கள், தொடக்க விழாக்கள் அனைத்தும் தேக்க நிலையில் காத்திருக்கின்றன. இது ஒரு டம்மி அமைச்சரவை, செயற்பாடு இல்லாத அமைச்சரவை. இந்தத் தவறான போக்கை அனுமதிக்கவே முடியாது.

**நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவரின் பெயரும் புகைப்படமும், அரசின் அதி காரபூர்வ அறிவிப்புகளில் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இது சம்பந்தமாக நீதிமன்றமும் அமைதி காக்கிறதே?**

நீதிமன்றம் தன்னிடம் வரும் அரசியல் தொடர்பான வழக்குகளில் முறையான தீர்ப்பு வழங்கத் தயங்குவதும் அல்லது பிரச்சினையைத் தட்டிக்கழிக்க முயல்வதுமே இதற்கான காரணம். இது அரசின் கொள்கை முடிபு எனச் சொல்லி, அரசைப் பற்றி புகார் கூறும் மனுக்களில் அரசையே முடிவெடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிடுவது கொடுமையிலும் கொடுமை.

ஜெயலலிதாவின் புகைப்படத்தைப் பயன்படுத்தும் வழக்கில், நான்கு வாரங்களுக்குள் தமிழக அரசு முடிவு எடுக்க வேண்டும் என நீதிமன்றம் சொன்னது. நான்கு மாதங்களைக் கடந்தும் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இப்போதும் அவரது புகைப்படங்கள்தான் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன.

இப்போது நீதிமன்றம், தமிழக அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு தொடுக்குமா என்ன? டிராஃபிக் ராமசாமி போன்றோர் பேனரைக் கிழிக்கும்போது "நீங்கள் சட்டத்தைக் கையில் எடுக்கக் கூடாது' எனச் சொல கிறார்கள். சரி, அவர் எடுக்க வேண்டாம். ஆனால், நீதிமன்றமே சட்டத்தைக் கையில எடுக்கவில்லை என்றால் எப்படி? இது மிக மிக மோசமான உதாரணம். நீதிமன்றம் தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறது.

**தமிழக எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன?**

தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படக்கூடிய கட்சியைப் பற்றி மக்களுககு அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஆளும் கட்சியை கைநீட்டிக் குற்றம் கூற முடியாத அளவுக்கு, பதவியில் இருக்கும்போது அவர்களும் அனைத்துவிதமான முறைகேடுகளிலும் ஈடுபட்டிருந்தனர். அதனால், மக்கள் அல்லல்பட்டு, அழுது, கண்ணீர் வடித்தாலும், ஆளும் கட்சியைத் தோற்கடிக்கும் படையாக அதை மாற்றும் வலிமை எதிர்க்கட்சிகளுக்கு இப்போது இல்லை.

**மோடி ஆட்சி?**

மோடி மஸ்தான்களால் பாம்பைப் படமெடுத்து ஆடச் செய்யத்தான் முடியுமே தவிர, பாம்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியாது. காங்கிரஸ் ஆட்சியின் ஜெராக்ஸ் போலத்தான் நடக்கிறது மோடி ஆட்சி.

**மத்திய அரசின் நிலம் கையகப்படுத்தும் மசோதாவுக்கு, அ.தி.மு.க அரசின் ஆதரவு மறைமுகமாக எதையோ உணர்த்துகிறது' என கருணாநிதி குற்றம் சுமத்தி இருக்கிறாரே?**

தி.மு.க ஆட்சியில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்க, 33 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலத்தை அடிமாட்டு விலையில் பிடுங்கியதை எவரும் மறக்க முடியாது. 2ஜி அலைக்கற்றை ஊழல், நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு ஊழல் இவற்றை எல்லாம் தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு, நிலம் கையகப்படுத்தும் சட்டத்தைப் பயன்படுத்தி பல மாநிலங்களின் அரசியல் குண்டர்கள் கோடிக்கணக்கான ரூபாய் சுருட்டி இருப்பதை, முறையான ஒரு விசாரணை கமிஷன் அமைத்தால் கண்டுபிடிக்க முடியும். அதே சமயம், இந்தச் சட்டத்தை காங்கிரஸ் கொண்டுவந்தபோது எதிர்த்த அ.தி.மு.க., இப்போது பா.ஜ.க-வை ஆதரிக்கிறது ஏன்றால், அந்தக் கட்சிக்கு வேறு நிர்பந்தங்கள் இருக்கலாம்.

**மரண தண்டனை குறித்து இன்றும் குழப்பம் இருக்கிறதே?**



சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு

அரிதிலும் அரிதான காரணங்களுக்கு மரண தண்டனை வழங்கலாம் எனக் கூறும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, சரியான வழிகாட்டுதலை வழங்காததால் தவறான பல தீர்ப்புகள் வருகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலான நேரங்களில், முறையான வக்கீலை வைத்துக் கொள்ள முடியாதவர்களுக்கும், சாதி கட்டுமானத்தின் கீழ்நிலையில் உள்ளவர்களுக்குமே மரண தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர்க்க ஒரே வழி, மரண தண்டனைக்கு மரண தண்டனை விதிப்பதே!


**யூனியர் விகடன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை.மாணவர்கள் 147 பேர் படுகொலை!

**(நைரோபி)**

**கென்யாவில் பல்கலைக்கழக வளாகத்தில் கிறிஸ்தவர்களைக் குறிவைத்து பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய கொலை வெறித் தாக்குதலில் 147 மாணவர்கள் உயிரிழுந்தனர். 79 பேர் காயமடைந்துள்ளனர்.**



கென்யாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள காரிஸா நகர பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாணவர் விடுதியில் நேற்று முன்தினம் அதிகாலை பலர் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு நுழைந்த பயங்கரவாதிகள், சரமாரியாகச் சுட்டனர். பயங்கரவாதிகளின் தொடர் தாக்குதலில் பலர் காயமடைந்ததாக அங்கிருந்து தப்பிய மாணவர்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியை பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்தாலும், மாணவர் விடுதியில் ஏராளமானோரை பயங்கரவாதிகள் பிணைக் கைதிகளாகச் சிறை பிடித்து வைத்தனர். சோமாலியாவைச் சேர்ந்த அமைப்பான அல்-ஷபாப், கிறிஸ்தவர்களைக் குறிவைத்தே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக அங்கிருந்து தப்பிய மாணவர் ஒருவர் தெரிவித்தார்.




இந்த தாக்குதலில் 147 மாணவர்கள் உயிரிழந்ததாகவும், 79 பேர் காயமடைந்ததாகவும் கென்யா உள்துறை அமைச்சர் ஜோசஃப் என்கேசரி தெரிவித்தார்.

பலத்த காயமடைந்த பலர் நைரோபி நகருக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனிடையே, பாதுகாப்புப் படையினர் 16 மணி நேரத்துக்கும் மேல் நடத்திய தொடர் தாக்குதலில் 4 பயங் கரவாதிகளும் கொல்லப்பட்டனர். இதன்மூலம் இத்தா க்குதல் முடிவுக்கு வந்ததாக அமைச்சர் ஜோசஃப் தெரிவித்தார்.

இதற்கிடையே, அல்-ஷபாப் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அலி முகமது ரகே, அந்த அமைப்புக்குச் சொந்தமான வானொலியில் கூறுகையில், எங்கள் அமைப்பைச் சேர்ந்த "வீரர்"கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றார்.

கென்யாவின் தலை நகர் நைரோபியில் அமெரிக்கத் தூதர கத்தில் கடந்த 1998 ஆம் ஆண்டு அல்-கொய்தா நடத்திய தாக்குதலில் 224 பேர் கொல்லப்பட்டனர். அந்தத் தாக்குதலு க்குப் பிறகு மோசமான பயங்கரவாதத் தாக்குதல் தற்போது காரிஸா பல்கலைக்க ழகத்தில் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)






## கலிபோர்னியாவில் வரலாறு காணாத கடும் வரட்சியால் மக்கள் அந்தரிப்பு



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நிலவும் தொடர் வரட்சி காரணமாக தண்ணீர் பிரச்சினையை சமாளிக்கும் விதமாக தண்ணீர் பயன்பாட்டை 25 சதவிகிதம் குறைக்க ஆளுநர் உத்தர விட்டுள்ளார். இந்த ஆண்டுடன் சேர்த்து தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பனிப்பொழிவு பொய்த்து போனதால் கலிபோர்னியாவில் வரலாறு காணாத வரட்சி நிலவுகிறது. அம்மாகாணத்திற்கு தண்ணீர் ஆதாரமாக விளங்கி வந்த, பனிக்கட்டி உருகுவதால் கிடைக்கும் தண்ணீர் அளவு மிகவும் குறைந்து விட்டது. கலிபோர்னியாவின் தண்ணீர் தேவையில் மூன்று பங்கு பனி உருகுதல் மூலமே கிடைத்து வந்தது. இதுபற்றி ஆளுநர் ஜெர்ரி புரவுன் கூறுகையில், "நாம் 5 அடி பனிக்குமேல் நிற்பதற்கு பதிலாக வெறும் தரை மீது நின்றுகொண்டிருக்கிறோம். இது மிகவும் ஆபத்தான அறிகுறி. கடுமையான பல சட்டங்கள் மூலம் இதை தடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

இந்த புதிய அறிவிப்பின்படி, கோல்ப் மைதானங்கள், அலங்கார புல்வெளிகள், தொழில் பூங்கா, கல்லறைகள் போன்றவைகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த நீரின் அளவில் 25 சதவிதம் குறைக்கப்பட்டு உள்ளது. இதை அமுல்படுத்தாதவர்கள் மீது 10 ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு அளிக்கப்படும் நீரின் அளவு ஏற்கனவே கடுமையாக குறைக்கப்பட்டுள்ளதால் இந்த கட்டுப்பாடுகள் அவர்களுக்கு பொருந்தாது.

அமெரிக்கா தன்னுடைய கட்டுப்பாடு இல்லாத பொருளாதர வளர்ச்சிக்கான விலையை கொடுக்க ஆரம்பித்திருப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றஞ்சுமத்தி உள்ளார்கள். எப்பாடுபட்டாவது இந்தியாவையும் அமெரிக்கா போல மாற்ற துடிக்கும் ஆட்சியாளர்கள் இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவச் சோதனை சாவடிகளில் தீவிரவாதிகள் வெடிகுண்டு வீச்சு

### 15 வீரர்கள் பலி

எகிப்தில் இராணுவ சோதனை சாவடிகளில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய வெடிகுண்டு தாக்குதல்களில் 15 வீரர்கள் பலியாகினர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் புரட்சியின் மூலம் சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக் ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் அங்கு அரசுகள் மாறினாலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவி வருகிறது.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி முகமது முர்சியை 2013 ஆம் ஆண்டு இராணுவம் பதவியில் இருந்து நீக்கியது. அதன் பின்னர் தற்போது அப் தெல் பதே அல்சிசி ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார்.

முர்சி பதவி நீக்கம் செய்யப்பட்டபின் சினாய் தீபகற்ப பகுதியில் தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. அவர்கள் இதுவரை நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸாரை கொன்று குவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சினாய் தீபகற்ப பகுதியில் பல இராணுவ சோதனை சாவடிகள் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள்.

அதில் 15 இராணுவ வீரர்கள் மற்றும் பொது மக்கள் 2 பேர் ஆக மொத்தம் 17 பேர் பலியானனர். இந்த தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

சினாய் தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# இழப்புக்கள், போராட்டங்கள் எல்லாம் தமிழரசுக்கட்சிக்கு மட்டும் சொந்தமில்லை

## த.தே.கூ.தலைவருக்கு த.வி.கூ.செயலாளர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

**இழப்புக்கள், போராட்டங்கள் எல்லாம் தமிழரசுக் கட்சிக்கு மட்டும் தான் சொந்தம் என்ற நினைத்து விடாதீர்கள். அதைவிட்டு பன்மடங்கு போராட்டங்களையும் இழப்புக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருக்கின்ற ஏனைய அமைப்புக்களும் சந்தித்திருக்கின்றன என்பதை தமிழரசுக் கட்சியினருக்கு நீங்கள் ஞாபகப்படுத்துங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,நான் கடந்த பல நாட்களாக தங்களிடம் பலவிடயங்கள் சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஒன்றிற்கேனும்பதில் தரவில்லை.

இருப்பினும் 2015.03.28 ஆம் திகதி திருகோணமலையில் நட ந்த கருத்தரங்கில் கூட்டமைப்பு பதிவு சம்மந்தமாக நீங்கள் கூறிய கருத்துக்களில் ஏதோதமிழரசுக் கட்சிதான் நீண்டகால போராட்டங்களை முன்னெடுத்ததுஎன்றும் அவர்களின் சம்மதம் இல் முக்கியம் என்றும் கருத்துக் கூறியிருந்தீர்கள்.

போராட்ட வரலாறுகளை எடுத்துப் பார்த்தால் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற எல்லாக் கட்சிகளும் போராட்ட வடிவங்களை மாற்றிக் கொண்டுதமிழரசுக் கட்சியைவிடமிகத் தீவிரமாக போராடியுள்ளன. அதுமட்டுமல்ல தமிழரசுக் கட்சியைவிட ஏனைய கட்சிகள் அதிகளவான உயிரிழப்புக்களைசந்தித்தோடுமட்டுமல்லாமல் விலைமதிக்கமுடியாத தங்களது தலைவர்களையும் இழந்துள்ளன.

ஏற்கனவேதமிழ் மக்களின் பிரச்சினையை தமிழரசுக்கட்சியால் தீர்க்கமுடியாது என தீர்க்க தரிசனத்தால் உணர்ந்து கொண்டபடியால்தான்தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் அனைத்தையும் முடக்கிவைத்து விட்டு தந்தை செல்வா 1972ஆம் ஆண்டு அப்போதிருந்தமுக்கியதமிழ்த் தலைவர்களான சட்டமாமேதை அமரர் ஜீ. ஜீ.பொன்னம்பலம், மலையகத் தமிழர்களின் விடி வெள்ளி அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அகியோரை இணைத்துக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

அந்த வரலாறு தங்களுக்குதெரிந்திருக்க நியாயமில்லை ஏனெனில் அப்போது தாங்கள் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந் தவராக இருந்தும் தமிழரசுக் கட்சியில் எந்தவொரு முக்கியபதவியிலும் இருக்கவுமில்லைதமிழரசுக்கட்சியின் எந்தவொருபோராட்டத்திலும் கலந்துகொண்டதுமில்லை.

இருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானபின்னர்தான் தாங்கள் ஒரு பிரபல்யமான சட்டத்தரணி என்ற காரணத்தினால் தந்தை செல்வா உங்க ளையும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைத்துக் கொண்டு செயற்பட்டார்.

1977ஆம் ஆண்டு தாங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில்தான் போட்டியிட்டு முதன் முதலாக பாராளுமன்றம் சென்றீர்கள் என்பதைக் கூட மறந்து விட்டீர்களே.

தந்தைசெல்வாவின் மறைவிற்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதான எதிர்க்கட்சியானதும் அதில் தாங்களும் அங்கம் வகித்தீர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டங்கள், அதன் தலைவர்களின் தலை மறைவு வாழ்க்கைகள், தமிழ்மக்களின் பிரச்சினைகளை சர்வதேச அரங்கிற்கு எடுத்துசென்றமுறைகள் எல்லாவற்றையும் எப்படிமறந்தீர்கள்?. பெருமதிமிக்க எத்தனைபெருந்தலைவர்களை எல்லாம் துப்பாக்கி குண்டுகளுக்கும் தற்கொலைத் தாக்குதல்களுக்கும் பலி கொடுத்துள்ளோம்.

அப்பாவித் தொண்டர்கள் எத்தனை பேரை துப்பாக்கிகுண்டுகளுக்கு இரையாகக் கொடுத்தோம் இவைகளையெல்லாம் நன்கு தெரிந்திருந்தும் அறிந்திருந்தும் தமிழரசுக் கட்சிதான் பல போராட் டங்களை நடத்தியதுஎன்று எவ்வாறு கூற முடிந்தது?தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஒப்பிடும்போது போராட்டங்களானாலும் சரி, இழப்புகளானாலும் சரி தமிழரசுக் கட்சியின் பங்குமிகச் சிறியதே.

இதைநன்குஅறிந்த தாங்கள் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாற்றை மறைத்துவிட்டு,அவரால் முடக்கி வைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் புகழ்பாடுவது வேடிக்கையானது. இதுதந்தைசெல்வாவிற்குசெய்யும் மாபெரும் துரோகமாகும்.

ஜனநாயக ரீதியில் போராடிய கட்சிகளில் அதிகளவான இழப்புகளை சந்தித்த ஒரேகட்சிதமிழர் வடுதலைக் கூட்டணிதான் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அவசியமில்லை.

எனவே இழப்புக்கள், போராட்டங்கள் எல்லாம் தமிழரசுக் கட்சிக்குமட்டும்தான் சொந்தம் என்று நினைத்துவிடாதீர்கள்.

அதை விட பன்மடங்கு போராட்டங்களையும் இழப்புக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருக்கின்ற ஏனைய அமைப்புகளும் சந்தித்திருக்கின்றன என் பதைதமிழரசுக் கட்சியினருக்கு நீங்கள் ஞாபகப்படுத்துங்கள்.

நீங்கள் சர்வாதிகாரி இல்லை என்று சொன்னாலும்கூட நீங்கள் தான் முக்கிய முடிபுகளை எடுக்கின்றீர்கள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

எனவே கூட்டமைப்பு பதிவு விடயத்தில் ஏனைய கட்சிகளின் எண்ணங்களுக்கு மதிப்பளியுங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## நீதிமன்ற பரிந்துரைகளை மீறி மகிந்தவுக்கு அதிக சலுகைகள்

### ராஜித குற்றச்சாட்டு


முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு பொருத்தமான பணிகளை தவிர வேறு பணிகளில் ஈடுபட்டால், அவரே அதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம்வைத்தியசாலையின் புதிய மருத்துவப் பிரிவொன்றை திறந்து வைத்து பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள பரிந்துரைகளையும் மீறி முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு வாகனங்களும் ஏனைய வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதாக இல்லை என முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியிருந்த நிலையில் அவருக்கு 8இற்கும் மேற்பட்ட வாகனங்களும், பாதுகாப்பும் வழங்கபட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### இராமலிங்கம் அருளையா

பிராமணோடை,கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அருளையா நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.




### வல்லிபுரம் கதிர்காமத்தம்பி

(ஓய்வுபெற்ற அதிபர் யா/வல்வெட்டித் துறை அமெரிக்க மிஷன் பாடசாலை)

அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் கதிர்காமத் தம்பி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணியளவில் அறிவகம் அல்வாய் வடமேற்கு,அல்வாயில் நடைபெற்று பின்னர் பூதவுடல் திக்கம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி வைத்தியநாதன் பத்தினி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி கட்சன் வீதி, திருவையாறு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியநாதன் பத்தினி கடந்த முதலாம் திகதி புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.



### வாமதேவா ஜெயதேவா

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, வத்தளை ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட வாமதேவா ஜெயதேவா கடந்த முதலாம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கெரவலப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சுந்தரலிங்கம் பவளமலர்

பண்டத்தரிப்பு சாந்தையைப் பிறப்பிடமாகவும்,கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பவளமலர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப.3 மணியளவில் Elgin Mills Cemetery, 1591 Elgin Mills Rd E, Richmond Hill, ON L4S 1M9, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### பொன்னுத்துரை இரகுநாதன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும்,கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரகுநாதன் கடந்த முதலாம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை இணுவிலில் நடைபெறும்.



### சதாசிவம் நாகரட்ணம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன் New Malden Wimbledon ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் நாகரட்ணம் கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் North East Surrey Crematorium, Lower Morden Lane, Garth Road, SM4 4NU, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமனில் உள்நாட்டுப் போர் தீவிரம்; 2 வாரங்களில் 519 பேர் உயிரிழப்பு

## ஐ.நா. அறிவிப்பு

(நியூயோர்க்)

**உள்நாட்டுப்போர் தீவிரம் அடைந்துள்ள ஏமனில் கடந்த 2 வாரங்களில் மட் டும் 519 பேர் உயிரிழந்தனர் என்று ஐ.நா. பாதுகாப்புச்சபை அறிவித்துள்ளது.**

அரபு நாடுகளில் ஒன்றான ஏமன நாட்டில், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் அரசு படைகளை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றனர்.

ஏமனில் உள்நாட்டுப்போர் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வருகிறது. ஏடன் நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகையை பிடிப்பதற்கு, ஜனாதிபதி ஆதரவு படையினருடன் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களும், அவர்களுடன் கரம் கோர்த்துள்ள முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே படையினரும் கடந்த சில நாட்களாக கடுமையாக சண்டையிட்டு வந்தனர்.

கிளர்ச்சியாளர்கள் வலுவான நிலைக்கு முன்னேறியதை தொடர்ந்து ஜனாதிபதி அபெத் ரா்போ மன்சூர் ஹாதி, சவுதி அரேபியாவுக்கு தப்பினார்.

இந்த நிலையில், ஏடனில் கடுமையான தாக்குதல் நடத்தி, ஜனாதிபதி மாளிகையை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். ஏமன் பாதுகாப்பு அதிகாரிகள் இதை உறுதி செய்தனர்.

இந்த தாக்குதலின்போது 18 சிவிலியன்கள் உட்பட 44 பேர் கொல்லப்பட்டனர். ஏடன் நகரில் கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வந்ததை கட்டுப்படுத்துவதற்கு சவுதி



கூட்டுப்படைகள் மேற்கொண்ட முயற்சிக்கு இது பின்னடைவாக கருதப்படுகிறது.

நாட்டின் ஜனாதிபதியான அப்த்ரபு மனசூர் ஹாதி தலைநகர் சனாவல் இருந்து வெளியேறி சவுதி அரேபியாவில் தஞ்சம் புகுந்து உள்ளார்.

மேலும், கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு ஆதரவு அளிக்கும் படியும் அவர் சவுதி அரேபியாவைக் கேட்டுக்கொண்டார். இதை ஏற்றுக்கொண்ட சவுதி அரேபியா, ஏமனில் கிளர்ச்சியில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு எதிராக வான் வெளி தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும் 9 அரபு நாடுகள் ஏமன் ஜனாதிபதிக்கு ஆதரவாக இந்த தாக்குதலில் ச்வுதி அரேபியாவுடன் கைகோர்த்து உள்ளது. அங்கு இரு தரப்புக்கும் இடையே தொடர்ந்து போர் நடைபெற்று வருகிறது.

உள்நாட்டுப்போர் தீவிரம் அடைந்து உள்ள ஏமனில் கடந்த 2 வாரங்களில் மட்டும் 519 பேர் உயிரிழந்தனர் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது. இவர்களில் பொதுமக்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவர்.

சவுதி அரேபியா தலைமையில் தாக்குதல் நடத்தப்பட்டு வந்தாலும், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 வாரங்க ளில மட்டும் நடந்த போரில் 1,700 பேர் காயம் அடைந்து உள்ளனர் என்றும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கானசெயலாளர வேலரி அமோஸ் தனது அறிகையில் தெரிவித்துள்ளார். (இ)

# அரசியல் காரணங்களுக்காக எனது சொத்துக்கள் முடக்கம்


## தயாநிதி மாறன் தெரிவிப்பு

(சென்னை)

சட்டத்தை மீறி, யாரையோ திருப்திப்படுத்துவதற்காக சொத்துக்களை முடக்கி அமலாக்கப்பிரிவு செயற்பட்டிருக்கிறது என முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏர்செல் - மேக்ஸிஸ் விவகாரம் தொடர்பாக தயாநிதி மாறன், அவரது சகோதரர் கலாநிதி மாறன் ஆகியோரது சுமார் 742 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் இந்திய அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், ஏர்செல் - மேக்ஸிஸ் வழக்கில் சம்பந்தப்பட்ட கம்பனிகள் எதிலும் எனக்குப் பங்கோ, பாத்யதையோ இல்லாதது மட்டுமல்லாமல், அந்த நிறுவனங்களிடமிருந்து எனக்குப் பணப்



பரிமாற்றம் ஏதும் நடைபெறவில்லை. சன் டைரக்ட் டிவி, சவுத் ஏஷியன் எப்எம் ஆகிய நிறுவனங்களோடும் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இந்த நிலையில், மேலே குறிப்பிட்ட நிறுவனங்களிடையே தொழில ரீதியாக நடைபெற்ற பண முதலீடு, திசை திருப்பப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசின் அனுமதியைப் பெற்று நடைபெற்ற பண முதலீட்டிற்கு வண்ணம் பூசுவது அரசியல் அல்லாமல் வேறாக இருக்க முடியாது என்றும் முடக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சொத்துக்கள் எல்லாம் ஆஸ்ட்ரோ நிறுவனத்தின் முதலட்டுக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே வாங்கப்பட்டவை என்று தெரிந்தும் அமலாக்கத்துறை இந்த முயற்சியில் ஈடுபட்டதாக கூறியுள்ள அவர் இதிலிருந்து அமலாக்கத் துறையின் சொத்து முடக்கும் முயற்சி என்பது, யாருடைய கைப்பாவையாகவோ அமலாக்கத்துறை செயற்படுகிறது என்பதைத் தெளிவாக்குகிறது என்றும்தாயாநிதிமாறன்மேலும குற்றஞ்சாட்டியுள்ளார். (இ)

# துணை விமானி பற்றி திடுக்கிடும் தகவல்கள்

(பெர்லின்)

ஸ்பெயினில் இருந்து ஜேர்மன் நோக்கி சென்று கொண்டிருந்த ஜேர்மன்விங்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தை துணை விமானி வேண்டும் என்றே விபத்துக்குள்ளாக்கியதாகக் கூறப்படும் நிலையில், துணை விமானி பற்றி மேலும் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 150 பேர் பலியாகினர்.

இது குறித்து விசாரணை நடத்தி வரும் அதிகாரிகள், துணை விமானி ஆண்ட்ரூஸ் லூபிட்ஸ் வீட்டில் இருந்து அவரது கணனியை கைப்பற்றி ஆய்வு செய்ததில், அவர் தற்கொலை செய்து கொள்வதற்கான வழிமுறைகளை இணையத்தில் தேடி இருப்பதும், அது குறித்து விதமான இணையத்தளங்களுக்குச் சென்று அவர் பாரத்திருப்பதும், விமானிகள்



அறைக்கதவின் பாதுகாப்பு குறித தும் அவர் இணையத்தில் தேடி இருப்பதும தெரிய வந்துள்ளது.

இதன்மூலம், அவர்மன அழுத்தத்தில் சிக்கியிருந்தது தெரிய வந்திருப்பதாகவும், அவருக்கும், தீவிரவாத அமைப்புகள் எதற்கும் தொடரபில்லை என்றும் விசார ணையில் தெரியவந்துள்ளது. (இ-5)

## ராணுவ வீரர்கள் மூவர் உயிரிழப்பு

இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். திரப் மாவட்டத்தில் இராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தை தீவிரவாதிகள் திடீரென தாக்கினர்.

தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டு நடத்திய தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

மேலும் 4 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். (இ-5)

# தற்கொலைத் தாக்குதலில் ஆப்கானில் 16 பேர் மரணம்

(கோஸ்த்)

ஆப்கானிஸ்தானில் ஊழலுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குலில் 16 பேர் உயிரிழந்தனர்.

அந்த நாட்டின் கோஸ்த் நகரில் இந்தத் தாக்குதல் நேற்றுமுன்தினம் நிகழ்த்தப்பட்டது.

இதுகுறித்து கோஸ்த் மாகாண ஆளுநர் அப்துல் ஜாபர் நயீமி கூறியதாவது,

ஆப்கானிஸ்தானில் அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் குலைக்கும் விதமாக பொதுமக்களின் பேரணியில் தற்கொலைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

இதில் 16 பேர் உயிரிழந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 40 பேர் காயமடைந்தனர் என்றார் அவர். அப்துல் ஜாபர் நயீமி ஊழலில் ஈடுபட்டதாகக் கூறி, அவரது [illegible] வாரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் மீது இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.


இந்தத் தாக்குதலுக்கு தாங்கள் காரணமல்ல என ஆப்கான் தலிபான்கள் மறுத்துள்ளனர். எனினும், பொதுமக்கள் மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்களை தலிபான்கள் வெளிப்படையாக ஒப்புக் கொள்வதில்லை எனக் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## வீதி விபத்தில் 9பேர் மரணம்

இந்தியாவின் தமிழ்நாட்டில் தண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே நேற்று அதிகாலை நடந்த வதி விபத்தில் 9 பேர் பலியாகியுள்ள அதே வேளை ஒருவர் கவலைக்கிடமான நிலையில வைத்தியசாலையில் அனுமதிக் ப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து தெரிய வருவதாது, கரூர் நோக்கிச் சென்று கொணடிருந்த கார் செம்பட்டி அருகே எதிரே வந்த பால் வான் மீது மோதியது. இதல 9 பேர் சம்பவ இடத்திலேயே பலி யாகினர். ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த வீதி விபத்தால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் போக்குவ ரத்து பாதிக் கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் ஐபிஎல் விளையாட அஞ்சலோ மத்யூஸிற்குத் தடை




8 ஆவது ஐபிஎல்இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் 12 மைதானங்களில் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறும் லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டிகளில் டில்லி டேர்டெவில்ஸ் அணியில் இடம்பிடித்திருக்கும் இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாட பல்வேறு அமைப்புகள் பலத்த எதிர்ப்பு தெரிவித்ததால் கடந்த 2 ஆண்டுகளாக ஐபிஎல் போட்டிக்கான சென்னை போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாட அனுமதிக்கப்படவில்லை. இலங்கை வீரர்களுக்கான தடை இந்த ஆண்டும் நீடிக்கும் என்று தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளர் காசி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை ஐபிஎல் நிர்வாக குழுவுக்கும் அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். எனவே சென்னையில் நடைபெறும் ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் யாரும் களம் காண முடியாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (க)

# இலங்கை தெரிவுக்குழுவிலிருந்து சனத் ஜெயசூரியா இராஜினாமா



இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா தனது பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார். இவர் தனது இராஜினாமா கடிதத்தை விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்கவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை, தெரிவுக்குழுவில் உள்ள ஏனைய சில உறுப்பினர்களும் இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரரும் சகலதுறை ஆட்டக்காரருமான சனத் ஜெயசூரியா கடந்த 2013 ஆம்ஆண்டு ஜனவரி மாதம் தெரிவுக் குழு தலைவராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மலேசிய ஓபன் பட்மின்டன் தொடரில் சாய்னா காலிறுதிக்கு முன்னேற்றம்



கோலாலம்பூரில் நடைபெற்று வரும் மலேசிய ஓபன் பட்மின்டன் தொடரில், உலகின் நம்பர்-1 வீராங்கனையான சாய்னா நேவால் காலிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாம் சுற்று ஆட்டத்தில் சாய்னா நேவால், சீனாவின் யாவோ ஜியூவுடன் மோதினார். தொடக்கம் முதலே அதிரடியாக ஆடிய சாய்னா, 21-13, 21-9 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

சமீபத்தில் இந்தியா ஓபன் சம்பியன் பட்டம் வென்ற சாய்னா, நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் இந்தோனேஷியாவின் மரியாவை வென்றது குறிப்பிடத்தக்கது. (க)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து; கொல்கத்தா அணியில் ககா



கொல்கத்தா அணிக்காக ககா விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி பாணியில் இந்தியன் சுப்பர் 'லீக்' காற்பந்து போட்டி கடந்த ஆண்டு நடந்தது.

கொல்கத்தா, சென்னை, புனே, மும்பை, டில்லி, கோவா, கேரளா, நார்த் ஈஸ்ட் யுனைடெட் ஆகிய 8 அணி விளையாடின. ஒவ்வொரு அணியிலும் வெளிநாட்டு வீரர்கள், உள்ளூர் வீரர்கள் இணைந்து விளையாடினர்.

இந்த அணிகளை கிரிக்கெட் பிரபலங்கள், இந்தி சினிமா நட்சத்திரங்கள் விலைக்கு வாங்கினர். கொல்கத்தா அணிக்கு சவுரவ் கங்குலியும், கேரளா அணிக்கு டெண்டுல்கரும் உரிமையாளர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில் கொல்கத்தா அணியில் பிரபல பிரேசில் அணி வீரர் ககாவை ஒப்பந்தம் செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன. பிரேசில் அணியில் இருந்து ஓய்வு பெற்ற அவர் தற்போது அமெரிக்கன் கிளப் அணியில் விளையாடி வருகிறார்.

அந்த அணியுடனான ஒப்பந்தம் விரைவில் முடிகிறது. இதையடுத்து அவரை கொல்கத்தா அணிக்கு இழுக்க கங்குலி விரும்புகிறார். இதுகுறித்து கங்குலி கூறுகையில், ககா கொல்கத்தா அணியில் இடம்பெற பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அது இன்னும் முடியவில்லை. அது முடிந்ததும் தெரிவிக்கிறேன் என்றார். (க)

# மியாமி ஓபன் டென்னிஸ்; இறுதிப்போட்டியில் செரினா



அமெரிக்காவின் பிளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரில் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையருக்கான போட்டியில் உலக தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் செரினா வில்லியம்ஸ், தரவரிசையில் 3 ஆவது இடத்தில் இருக்கும் ரோமானியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலேப்-ஐ எதிர் கொண்டார். இதில் 6-2, 4-6, 7-5 என்ற கணக்கில் செரினா வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

முதல் செட்டை செரினா 6-2 என எளிதில் வென்றார். ஆனால் சிமோனா 2 ஆவது செட்டில் செரினாவுக்கு நெருக்கடி கொடுத்தார். இதன் காரணமாக செரினா இரண்டாவது செட்டை 4-6 என இழந்தார். இதனால் வெற்றியை நிர்ணயிக்கும் 3 ஆவது சுற்றில் இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினார்கள்.

இதனால் 3 ஆவது செட் பரபரப்பாக சென்றது. 0-3 என பின் தங்கிய சிமோனா அபாரா ஆட்டத்தால் 5-5 என சமநிலைக்கு ஆட்டத்தை கொண்டு வந்தார். ஆனால், செரினாவின் திறமையான ஆட்டத்தில் அந்த செட்டை செரினா 7-5 என கைப்பற்றி இறுதி போட்டிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த சுராஸ் நவர்ரோவை எதிர்கொள்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எந்தவிடயமும் காரணம் இன்றித் தோன்றுவதில்லை.

– ஸ்டோவ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கூடுகட்ட முடியாத குயில்கள் காகக் கூட்டை நாடுகின்றன

குயில்கள் ஒருபோதும் அடைகாத்து குஞ்சு பொரிப்பது கிடையாது. காகக் கூட்டில் முட்டையிடுவதைத் தவிர குயில்களுக்கு குஞ்சு பொரிப்பதில் – குஞ்சை வளர்ப்பதில் எந்தப் பங்களிப்பும் இல்லை. இவ்வாறு குயில்கள் அடைகாக்காமல் இருப்பதற்குக் காரணம் கூடுகட்ட முடியாமல் போனதே ஆகும்.

அட! எல்லாப் பறவைகளும் கூடு கட்டி குஞ்சு பொரிக்க, இந்தக் குயில்களுக்கு மட்டும் ஏன் கூடு கட்டத் தெரியாமல் போனது என்ற கேள்வி இப்போது எழுகிறது.

இங்கு தான் குயில்களின் ஒழுக்கம் என்ற விடயம் எழுகை பெறுகிறது. அதாவது பெண் பறவைகள் முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிப்பதாக இருந்த போதிலும் கூடு கட்டுதல் என்ற பிரசவத்திற்கான ஏற்பாட்டில் ஆண் பறவைகளின் ஒத்துழைப்பு பரிபூரணமாக உண்டு.

அது மட்டுமன்றி பெண் பறவை முட்டையிட்டு, அடைகாத்து குஞ்சு பொரிக்கின்ற பணியை செய்யும் போது, பாதுகாப்பு மற்றும் உணவு தேடல் ஆகிய பெரும் பணியை அதன் சோடியான ஆண் பறவையே செய்து முடிக்கின்றது.

ஆனால் குயில்களிடம் அப்படியான ஏற்பாடு எதுவும் கிடையாது. ஒரு பெண் குயில் ஒரு ஆண் குயிலுடன் மட்டும் குடும்பம் நடத்துவது என்ற நெறிமுறையை மீறிவிடுவதன் காரணமாக, கூடு கட்டுகின்ற வேலையில் ஆண் குயில் பங்கேற்பதில்லை. ஆண் குயிலின் ஒத்துழைப்பு இல்லாமல் பெண் குயிலால் கூடுகட்டிவிட முடியாது.

ஆக, பரத்தையர் கூட்டமாக குயில்கள் இருப்பதன் காரணமாகவே அவற்றால் கூடுகட்டவும் அடைகாக்கவும் முடியாமல் போயிற்று. என்ன செய்வது எல்லாம் அவன் செயல் என்று விட்டு விடலாம்.

கூடுகட்ட முடியாத – அடைகாக்கத் தெரியாத குயில்கள் காகக் கூட்டுக்காகக் காத்திருக்கின்றன. கூடுகட்டத்தெரியாத குயில்கள் எங்ஙனம் காகக் கூடுகளுக்காகக் காத்திருக்கின்றனவோ அது போல இலங்கையின் அரசியலிலும் சிலர் காத்திருப்பது தெரிகிறது.

ஆம், இலங்கையின் அரசியல் புலத்தில் தமது அரசியல் பிழைப்புக்காக மற்றவர்களின் கூட்டில் முட்டையிடுவதைத் தொழிலாகக் கொண்ட அரசியல்வாதிகளும் இருக்கவே செய்கின்றனர்.

காகத்தின் கூட்டில் குயில்கள் முட்டையிடுவதால், காகத்தின் முட்டை எது? குயிலின் முட்டை எது? என்பதை இனங்கான முடியாத சூழல் ஏற்படுவது போல, நம் அரசியலிலும் அத்தகையதொரு சூழல் ஏற்பட்டு விடுகின்றது.

குயில் குஞ்சு கூவும் வரை இனங்காண முடியாத நிலைமை இருப்பது போன்று, அடுத்தவர் கூட்டில் முட்டையிடும் அரசியல்வாதிகளின் சுயத்தை அறியாதவரை, அவர்களையும் நாம் இனங்காண முடியாது போகிறது.

எதுவாயினும் காகங்கள் விழிப்பாக இருக்காத வரை, குயில்கள் முட்டையிடுவதைத் தவிர்க்க முடியாது போல, அரசியல் கூடுகளைக் கட்டியவர்கள் விழிப்பாக இருக்காதவரை மற்றவரின் கூட்டில் முட்டையிடுகின்ற அரசியல்வாதிகளின் நடவடிக்கை தொடரவே செய்யும்.

இவ்வாறு இரவல் கூட்டில் முட்டையிட்டு தமது அரசியல் இருப்பைத் தக்க வைக்கின்ற அரசியல் வாதிகள் தொடர்பில் அரசியல் கட்சிகள் மட்டுமன்றி பொது மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் இலக்குகள் மாற்றமடையும்.

## இந்திய தம்பதியர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வெள்ளவத்தை விடுதி ஒன்றில் இருந்து இந்திய தம்பதியர் சடலமாக மீட்கப்பட்டனர். உயிரிழந்தவர்கள் 36 மற்றும் 37 வயது மதிக்கத்தக்கவர்கள் என கூறப்படுகின்றது.

இவர்கள் கடந்த 27ஆம் திகதி முதல் குறித்த விடுதியில் தங்கியிருந்தனர் என்றும் நேற்று முன்தினம் இரவு விடுதியிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் தாம் அங்கு சென்றபோது இருவரும் சடல மாகக் காணப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேறகொண்டு வருகின்றனர். (எ-11)

## தேசிய முன்னணியினர் பிரதமருடன் பேச்சு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஸ்ரீகொத்தாவில் சந்தித்து விஷேட கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள இலங்கையின் புதிய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் இதன்போது பேசப்பட்டது.

அத்துடன் மிக முக்கிய விடயமாக கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளை மீளக் கையளிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதாகவும், அதற்கான உரிய நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வதாகவும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்களிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலின் போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். அப்துர் ரஹ்மான் மற்றும் பொதுச் செயலாளர் எம்.ஆர்.நஜா முஹம்மத், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் ஐயூப் ஆகியோர் உள்ளிட்ட தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் கலந்துகொணடனர். (எ-11)

## 2 மாதங்கள் கடலில் தவித்தவர் உயிருடன் மீட்கப்பட்டார்

(கொழும்பு)

சுமார் இரண்டு மாதங்களாக கடலில் தன்னந்தனியாகத் தவித்துவந்த ஒருவர் தற்போது மீட்கப்பட்டுள்ளார். மீன்களை உண்டும் மழை நீரைக் குடித்தும் அவர் உயிரைத் தக்கவைத்திருந்தார்.

வியாழக்கிழமையன்று நார்த் கரோலினாவுக்கு 200 மைல் தொலைவில் தவித்துக்கொண்டிருந்த லூயிஸ் ஜோடர்ன் என்ற 37 வயது நபரை அந்த வழியாகச் சென்ற ஜெர்மன் நாட்டு டேங்கர் கப்பல் ஒன்று பார்த்தது.

அவர் சென்ற 35 அடி நீளமுடைய படகு தலைகீழாகக் கவிழ்ந்துவிடவே, அதன் முதுகுப் பகுதியில் அமர்ந்திருந்த அவர், இப்போது மீட்கப்பட்டுள்ளார்.

ஜனவரி மாத இறுதியில் அவர் காணாமல் போய்விட்டதாக அவருடைய குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஜோர்டன் மீட்கப்பட்ட பிறகு, அவரிடம் பேசிய, அவரது தந்தை, நான் உன்னை இழந்துவிட்டேன்" என்றே நினைத்தேன் என்று கூறினார்.

ஜெர்மன் நாட்டு சரக்குக் கப்பலில் இருந்தபடி தந்தையிடம் பேசிய ஜோர்டன், தான் இப்போது நலமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

அட்லாண்டிக் கடலில் தவித்துவந்த ஜோர்டன், மீன்களை பச்சையாக உண்டும், மழை நீரைக் குடித்தும் உயிர்பிழைத்திருந்ததாக மியாமியிலிருக்கும் கடலோரக் காவல் படையின் அதிகாரியான ரியான் தாஸ் கரோலினாவின் செய்தித் தொலைக்காட்சி ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

ஹஸ்டன் எக்ஸ்பிரஸ் என்ற ஜெர்மனியக் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட அவர், ஹெலிகொப்டர் மூலம் விர்ஜீனியாவின் நார்ஃபோக்கில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக அமெரிக்க கடலோரக் காவல்படைதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுபோல, ஒருவர் தாக்குப்பிடித்ததில்லை என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தெற்குக் கரோலினாவில் இருக்கும் கான்வே என்ற இடத்திலிருந்து தன்னுடைய ஏஞ்சல் என்ற படகில் மீன்பிடிப்பதற்காக ஜனவரி 23ஆம் தேதி அவர் புறப்பட்டார். ஆனால், அந்தப் படகு ஏன் கவிழ்ந்தது என்பது தெளிவாக வில்லை. (எ-11)

## சந்திர கிரகணம் இன்று

(கொழும்பு)

இலங்கையில் வாழ்பவர்களுக்கு அரை சந்திர கிரகணத்தை இன்று மாலை 6.18 முதல் 7.15 வரை காண முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

'சந்திரன் இன்று மாலை 4.46க்கு உதிக்கும். அப்போதிருந்து இரவு 8.00 மணி வரையும் அரை சந்திர கிரகணம் தென்படும்.

சந்திர கிரகணத்தின் இறுதி இரவு 8.00 மணி வரையும் தென்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முழுமையான கிரகணம், வட அமெரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் கிழக்கு ஆசியா பகுதியிலுள்ள மக்களுக்கு காணக் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சுதர்சனக் கிரியா

(யாழ்ப்பாணம்)

வாழும் கலைப்பயிற்சி எடுத்தவர்களுக்கான சுதர்சனக்கிரியா **(Long Kriya)** நாளை ஞாயிற்றுக்கிழமை, காலை 7.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியிலுள்ள திவயஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (எ)

## ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய 13 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் வைபவமும் இன்று சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் பொதுநூலகர் ச.சிவசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித்திணைக்கள முறைசார் கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ்.சுதுமலை செல்லத்துரை [illegible] அதிபர் [illegible] உப அதிபர் க.தில்லைநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



தெளிவு

இயலாத நிலை: சிறுவயது முதல் நம் வாழ்க்கையை ஆராயும் போது நாம் சாதிக்க எடுத்த முயற்சிகள் அனைத்துமே வெற்றியாக முடியவில்லை என்று தெளிவாகக்காணலாம். நம் முயற்சிகளுக்கு தெய்வீக அருளும் அனுக்கிரகமும் இருந்தாலே வெற்றி கட்டாயம் கிட்டும் என்பது தெளிவாக விளங்கும்.

(அருள் அசாத்தியம் என்று நினைத்ததை சாத்தியமாக்கும் அனுக்கிரகம்:- முடியாது என்றிருந்ததை முடித்துக் கொடுக்கும்)

நாம் நம் முயற்சியால் எதுவும் செய்யமுடியாது. கடவுளின் அருளும் அனுக்கிரகமும் இருந்தால் தான் முடியும் என்ற சாத்தியத்தை உணரும் போது இயலாத நிலைக்குச் செல்கிறோம்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



ஏதாவது மதிப்புள்ள ஒன்று வாழ்க்கையில் இருக்குமானால் அது அன்பு மட்டுமே. எல்லையற்ற, ஆழம் காணமுடியாத, வானம் போல் பரந்த,கடல்போல் ஆழம் கொண்ட அன்பு மட்டுமே. வாழ்க்கையிலுள்ள ஒரே மாபெரும் இலாபம் இது மட்டும்தான். இதை அடைந்தவன் பேறு பெற்றவன்.

வீரம்தான் மேலைநாடுகளுக்கு எனது செய்தி. என் நாட்டு அருமை மக்களே. இன்னும் அதிக வீரம் என்பதுதான் உங்களுக்கு எனது செய்தி.

உனது செல்வம் கடவுளுடையது. நீ அதற்குப் பாதுகாப்பாளன் மட்டுமே என்று கொள். பணத்தில் பற்றுக்கொள்ளாதே.

அனைத்தையும் ஒரு வேள்வியாக, இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய். உலகில் வாழு. ஆனால் அதில் ஒட்டிக்கொள்ளாதே. தாமரையின் வேர் சேற்றில் உள்ளது. அதன் இலையே எப்போதும் தூய்மையாக இருக்கிறது. பிறர் உனக்கு என்ன செய்தாலும் சரி உன் அன்பு எல்லோர் மீதும்பரவட்டும்.

தனக்குத் தானே நோய் தீர்க்கும் திறன் உடலுக்கு உண்டு. மனனப்பயிற்சி, மருந்து,உடற்பயிற்சி போன்றவை அதனைத் தூண்ட வல்லவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

## வீட்டுத்திட்ட பயனாளிகள் திண்டாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் வசிக்கின்ற மக்களின் இந்திய வீட்டுத்திட்டம் பெற்ற பயனாளிகள் தமது வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு மணலைப் பெறுவதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஒவ்வொரு மாதமும் கரைச்சி பிரதேச செயலகத்தினால் 100 உழவுஇயந்திர மணல் லோட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த அனுமதியைப் பெறுவதற்காக வீட்டுத்திட்டப்பயனாளிகள் ஒவ்வொரு மாதமும் அதிகாலை 2 மணியிலிருந்து காலை வரை கால்கடு கடுக்க நின்று மணல் அனுமதியைப் பெற்று வருகின்றனர்.

எனினும் மணல் பெறும் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டதனால் அனுமதி கிடைக்காது பலர் வீடு திரும்புவதையும் அவதானிக்க முடிகின்றது.



இதற்கான முக்கிய காரணம் குறித்த பிரதேச செயலகப் பிரிவில் தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டு வருகின்ற நிலையில் மணலுக்கான அனுமதி மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

இதனாலேயே இந்நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உழவு இயந்திர உரிமையாளர்களிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

வீட்டுத்திட்டத்திற்கான மணல் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்ற நிலையில் அதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை அனுமதியின்றி மணல் அகழ்வில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படுவதால் அவர்கள் சட்டரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இம்மாவட்டத்தில் மணல் போதுமான அளவு காணப்படுகின்றது. அதேவேளை பிறமாவட்டங்களுக்கும் வாகனங்கள் மூலம் மணல் ஏற்றிக்கொண்டு செல்லப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே முதலில் பிரதேச தேவைக்கு ஏற்ற வகையில் மணல் அகழ்விற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்களும் உழவு இயந்திரங்களின் உரிமையாளர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-277)

## 2348 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு இரண்டாயிரத்து 348 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என வவுனிக்குள விவசாய திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக காணப்படும் வவுனிக்குளத்தின் கீழ் உள்ள நீரின் அளவைக் கொண்டு 2 ஆயிரத்து 348 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது குளத்தின் நீர் மட்டம் 21 அடியாகவுள்ளதுடன் மத்திய துருசு நீர்ப்பாசன வாய்க்காலில் 68 ஏக்கரும் இடது கரை வாய்க்காலில் ஆயிரத்து 210 ஏக்கரும் வலது கரை வாய்க்காலில் 925 ஏக்கரும் என இரண்டாயிரத்து 203 ஏக்கரிலும் பொதுப்பங்குகளாக 145 ஏக்கரும் என இரண்டாயிரத்து 348 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது.

விதைப்பு திகதி ஏப்ரல் மாதம் 10 ஆம்திகதி எனவும் நீர் விநியோக கடைசித் திகதி ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி எனவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வாழை, தென்னை மரங்கள் நாசமாகின

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலியாறு உட்பட பல கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் காட்டு யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

வன்னி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் மீள்குடியேறியுள்ள நிலையில், குறித்த பகுதிகளில் மக்கள், விவசாயம் மற்றும் தோட்டச்செய்கை மூலம் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில். மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலியாறு உட்பட சில கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகள் விவசாய செய்கையினை சேதப்படுத்துவதோடு வீடுகளில் உள்ள தென்னை. வாழை போன்ற மரங்களையும் தொடர்ச்சியாக நாசப்படுத்துவதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வயது முதிர்ந்த சில யானைகளே மக்களின் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

எனவே. யானைகளினால் ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்தி செய்ய மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

# இரத்தம் வழங்கும் நிலையம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட பிராந்திய இரத்த வழங்கல் நிலையம் நேற்றுமுன்தினம் மதியம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார். வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு பிராந்திய இரத்த வழங்கல் நிலையத்தைத் திறந்து வைத்தனர்.



அதனைத் தொடர்ந்து அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலும் இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில்வைத்திய. சுகாதார வசதிகளை மக்கள் பெறுவதில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள், வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் குறித்து அமைச்சர் ராஜிதவிற்கு எடுத்து விளக்கப்பட்டது.

இதேவேளை மாவட்டத்தில் உள்ள கிராமிய மற்றும் பிரதேச வைத்தியசாலைகளான தருமபுரம் வைத்தியசாலை. அக்கராயன் வைத்தியசாலை, முழங்காவில் வைத்தியசாலை. வேரவில் வைத்தியசாலை. உருத்திரபுரம் வைத்தியசாலை ஆகியவற்றில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் தாதியர். மருத்துவ துறைசார்ந்த உத்தியோகத்தர்களின் பற்றாக் குறைகள் தொடர்பாகவும் அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன. குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்தார். தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் ஆண்.பெண் நோயாளர் விடுதிகளை அமைத்தல் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன். வன்னிப் பகுதியில் தாதியர் நியமனங்களின் போது க.பொ.த. சாதாரணதரத்தில் விஞ்ஞான பாடத்தில் "சி" தர சித்தி பெற்றிருக்க வேண்டியது அவசியமானது என்ற விதிமுறையில் தளர்வு ஏற்படுத்த வேண்டும். வன்னி யுத்தத்தின்போது இப்பகுதிகளில் கல்விச் செயற்பாடுகள் சீரற்று காணப்பட்டதால் உரிய பெறுபேறுகளை மாணவர்களால் பெற முடியாமல் போயிருந்தது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர், அமைச்சரவையின் விசேட அங்கீகாரத்தைப் பெற்று அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் போது கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி கார்த்திகேயன் மற்றும் வைத்திய அதிகாரிகள், தாதியர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)







துணுக்காய் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களின் "வரவு வீத த்தை நூறு வீதமாக்குவது" எனும் தொனிப் பொருளில் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் துணுக்காய் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறப்பாக விளையாட வேண்டும் என்ற வெறியுடன் உள்ளார் யுவராஜ்-கேரி கிஸ்டன்




வரும்ஐ.பி.எல் தொடரில்டெல்லி அணிக்காக சிறப்பாக விளையாட வேண்டும் என்ற வெறியுடன் யுவராஜ் இருப்பதாக அந்த அணியின் பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன் தெரிவித்து உள்ளார்.

மேலும் அவர் கூறுகையில். "நான் இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த காலத்தில் இருந்தே யுவராஜ்"டன் அற்புதமான உறவு இருந்து வருகிறது. தனிப்பட்ட வகையில் அவர் டெல்லி அணிக்காக விளையாட வேண்டும் என விரும்பினேன். முன்பு எப்போதையும் விட அவர் முழு உடல் தகுதியுடன் உள்ளார்.

இதே பகுதியை சேர்ந்த அணிக்கு விளையாடுவது அவருக்கு உதவியாக இருக்கும். ஐ.பி.எல். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து வேறுபட்டது. இதை புரிந்துகொண்டு சிறப்பாக செயல்படுவதற்கு ஒரு பயிற்சியாளராக எனக்கு கொஞ்சம் காலம் தேவைப் படுகிறது என தெரிவித்தார். (க)



# புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கிரகத்திற்கு செஸ் விஸ்வநாதன் ஆனந்தின் பெயர்



தமிழ்நாட்டை சேர்ந்த முன்னாள் உலக செஸ் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்தின் பெயர் சிறிய கிரகம் ஒன்றுக்கு சூட்டப்பட்டு உள்ளது. புதிதாக கண்டுபிடிக்கப்படும் சிறிய கிரகங்களுக்கு, புகழ்பெற்ற நபர்களின் பெயர்கள் வைக்கப்படுகின்றன.

ஏற்கெனவே, டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர், அமெரிக்க தடகள வீரர் ஜெஸ்ஸி ஓவன், கிரிக்கெட் வீரர் டொனால்ட் பிராட்மன் ஆகியோரின் பெயர்கள் சிறிய கிரகங்களுக்கு வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், 1988-ம்ஆண்டு ஒக்டோபர் 10-ம் தேதி ஜப்பானை சேர்ந்த கென்சே சுசுகி என்பவரால் சிறிய கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.

இந்த கிரகம் செவ்வாய் மற்றும் வியாழன் கிரகங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இது வரை எண்களை வைத்து மட்டும் அழைக்கப்பட்டு வந்த அந்த கிரகத்திற்கு இப்போது 'விஷ்யானந்த் 4538' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த பெயரை தேர்ந்தெடுத்த 'சிறிய கிரகங்கள் ஆய்வு மையத்தின்' விஞ்ஞானி மைக்கேல் ருடேன்கோ இதுபற்றி கூறும் போது, "பலரின் பெயர்களை கவனமாக பரிசீலித்தபின்பே விஸ்வநாதன் ஆனந்த் பெயரை தேர்ந்தெடுத்தேன்.


அவர் சிறந்த செஸ் வீரர் மட்டும் அல்ல, வானியல் மீது அதிக ஆர்வம் கொண்ட நல்ல மனிதரும் ஆவார்" என்று தெரிவித்து உள்ளார். (க)

# இடைக்கால நிர்வாக குழுவில் ஜெயவர்த்தனா இணைவு

இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாக குழுவில் ஒரு கௌரவ பதவியை ஏற்றுக்கொள்ள முன்னாள் அணித்தலைவர் ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் விளையாட்டுகளில் மேம்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் பாடசாலைகளில் ஒரு தரத்திலான கிரிக்கெட்டிற்கு ஜெயவர்த்தனா உதவுவார் என விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக பாடசாலை சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்க தவறி வருவதால், தற்போது பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ரி-20 போட்டிகளுக்கு ஜெயவர்த்தனா சிறந்த பங்களிப்பு வழங்குவார் எனவும்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நாலந்த கல்லூரியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக திகழ்ந்த ஜெயவர்த்தனா இலங்கை தேசிய அணிக்குள் 1997 ஆம ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்டார்.

பின்னர் இலங்கை அணியில் அசத்திய அவர், நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண போட்டித் தொடருடன் சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். (க)

# பீட்டர்சனுக்கு வாய்ப்பே கிடையாது இங்கிலாந்து பயிற்சியாளர் பீட்டர்

மிடில் ஆர்டர் பட்ஸ்மன் கெவின் பீட்டர்சனை மீண்டும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு அழைக்க வாய்ப்பே கிடையாது என அந்த அணியின் பயிற்சியாளர் பீட்டர் மூர்ஸ் அதிரடியாக தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி பட்ஸ்மனான பீட்டர்சனுக்கு கடந்த ஆண்டு கட்டாய ஓய்வளிக்கப்பட்டது. ஆனால் பீட்டர்சனோ மீண்டும் அணியில் இடம்பிடிக்க தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

இதனிடையே இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் புதிய தலைவராக வரவுள்ள காலின் கிரேவ்ஸோ, "பீட்டர்சன் மீண்டும் இங்கிலாந்து அணிக்காக விளையாடுவதற்கு வாய்ப்பு உள்ளது" என கருத்து தெரிவித்திருந்தார். மீண்டும் அணியில் இடம் பிடிக்க ஏதுவாக சுர்ரே அணிக்காக விளையாடுவதற்கு கடந்த வாரம் பீட்டர்சனும் ஒப்புக்கொண்டார்.

ஆனால் பயிற்சியாளர் பீட்டர் மூர்ஸ், பீட்டர்சனுக்கு வாய்ப்பே இல்லை என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, இன்னும் சில நாட்களில் தொடங்கவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் பீட்டர்சனுக்கு வாய்ப்பு இல்லை.

அதனால் அவர் மீது கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் விளையாடவுள்ள கப்டன் அலாஸ்டர் குக் உள்ளிட்ட 16 வீரர்களுக்கும் உதவுவதிலேயே நான் கவனம் செலுத்தி வருகிறேன்.

2014 எங்களுக்கு மிகக் கடினமான காலமாக அமைந்தது. இப்




போது மக்களும், நாங்களும் விரும்புகிற தாக்குதல் ஆட்டத்தை ஆடப் போகிறோம். தற்போதைய தருணத்தில் அப்படியொரு கிரிக்கெட் ஆட்டத்தின் மீதுதான் எங்களின் கவனம் உள்ளது. பீட்டர்சனை அணிக்கு அழைக்க வாய்ப்பில்லை என்றார்.

இங்கிலாந்து அணி, இந்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் போட்டி வரும் 13-ம் திகதி தொடங்குகிறது.






நல்லூர் ரோட்டரி கழகத்தின் அனுசரணையில் வடமாகாணத்தில் நான்காவதாக உருவாக்கப்பட்ட சுழிபுரம் ரோட்றக் கழகத்தின் முதலாவது செயற் திட்டமாக சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியில் சிரமதானம் செய்யப்பட்டது. இதில் சிரமதானம் நடைபெறவதையும் கலந்து கொண்ட அங்கத்தவர்களும் படங்களில் காணலாம்.

# ஆஸி - இந்திய போட்டியை 635 மில்லியன் ரசிகர்கள் பார்வை

உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் இந்தியா- அவுஸ்திரேலிய அணிகள்மோதிய போட்டியை அதிக ரசிகர்கள் பார்த்த ரசித்ததாக ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி, லீக் சுற்றில் தேல்விகளைப் பெறாமல் அரையிறுதி வரை வந்தது. அதே போல் அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கமும் அதிகமாகக் காணப்பட்டது.

இதனால் சிட்னியில் நடைபெற்ற இவ்விரு அணிக்கான அரையிறுதிப் போட்டியில் யார் வெற்றிபெறுவார் என்று ரசிகர்கள் ஆவலுடன் காத்திருந்தனர்.

இதன் காரணமாக இந்தியா-அவுஸ்திரேலியா மோதிய போட்டியை மொத்தம் 635 மில்லியன் ரசிகர்கள் கண்டுகளித்தனர். இது இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டியைப் பார்த்த ரசிகர்களை விட அதிகம். (க)

# ஜனாதிபதியின் சகோதரருக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இளைய சகோதரரும், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத் தலைவருமான பி.ஜி.குமாரசிங்கவிற்கு மூன்று மடங்கு சம்பள உயர்வு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் நேற்று முன்தினம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா டெலிகொம் பணிப்பாளர் சபை குறிப்பிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத் தலைவரின் மாதாந்த சம்பளம் இதுவரை 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக இருந்த நிலையில் அதனை 30 லட்சம் வரை உயர்த்த ஸ்ரீலங்கா டெலிகொம் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கம்...

சரி செய்து, இந்தியாவுடனான நல்லுறவை மீள கட்டியெழுப்புவதற்கு இலங்கை பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு மாதங்களுக்குள் இந்திய பிரதமர் நரேந்திரமோடி முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அவரது விஜயத்தின் மூலம் நட்புறவு பற்றிய வலுவான செய்தியொன்றை அவர் இலங்கைக்கு வழங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மோசமான ஆட்சிக்காகவே மக்கள் அவரை தோற்கடித்தார்கள். மகிந்த ஆட்சியில், அவரது குடும்பத்தின் ஊழல்கள், மனித உரிமை மீறல், பல கொலைகள் மற்றும் ஒட்டுமொத்தத்தில் சுதந்திரம் இல்லாத நிலையே இலங்கையில் காணப்பட்டது.

ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட பின்னர் நாங்கள் அனுபவிக்கின்ற சுதந்திர உணர்வு மிகப்பெரியது என அவரது ஆட்சியில் இருந்த முன்னாள் அமைச்சர்களே தெரிவிக்கின்றார்கள்.

இலங்கையில் மைத்திரி அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் சுமுகமான உறவு நிலவுகின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தங்கள் அடையாளத்தை காப்பாற்றுவதற்காக அவ்வப் போது உரத்துக்குரலெழுப்புவர்கள். எனினும் எங்கள் மத்தியில் சிறந்த உறவு ஒன்று காணப்படுகின்றது. விமுக்தி குமாரதுங்க அரசியலுக்குள் நுழைவாரா என்று எனக்கு தெரியாது அவர் குறித்து நான் கருத்து தெரிவிக்க முடியாது.

ஆனால் நான் நிச்சயமாக மீண்டும் ஒரு முறை அரசியலுக்குள் நுழைய மாட்டேன், நான் மீண்டும் அரசியலுக்கு வருவது அசிங்கமான விடயம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## அமைச்சுப்...

அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டில் செயற்பட்டால், வெளி தரப்பினரால், நாட்டுக்கு எதிரான கெடுதியான அழுத்தங்களையும் மேற்கொள்ள முடியாது.

நாடு எதிர்நோக்கும் அழுத்தங்களை எதிர்கொள்ள பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களும் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## நல்லிணக்கத்தை....

உலகில் இன்று பலதரப்பட்ட நிலையில் பயங்கரவாதம் நிலவுகிறது.

மக்களை காப்பாற்றுவதாக கூறி இந்த பயங்கரவாத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இந்த பயங்கரவாத செயல்களால் மக்களை காப்பாற்ற முடியாது.

எல்லாத் தரப்பும் பிழைகளுக்கான பொறுப்பை ஏற்று செல்லும் போது இனங்களுக்கு இடையிலான இடைவெளியை குறைக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் புதிய அரசாங்கத்தின் நல்லிணக்கத் திட்டங்களுக்கு உதவத் தயார் என்றும் அமெரிக்க அதிகாரி உறுதியளித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவை, அமெரிக்கப் பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

நாட்டுக்கு விஜயம் செய்துள்ள எட்டு பேரைக் கொண்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை சந்தித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் மாலை இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

அமெரிக்க மனித உரிமை பிரதிநிதிகள் போரின் பின்னரான இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளனர்.

போரின் பின்னர் நாட்டின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

மனித உரிமை மேம்பாடு குறித்து புதிய அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## நாடாளுமன்றம்...

த்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதனை தவிர தகவல் அறியும் சட்டம் மற்றும் கணக்காய்வு சட்டமூலம் என்பன 22-ம் 23-ம் திகதிகளில் விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் இன, மத மற்றும் ஜாதிவாத பகையுணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடப்படுவதை தடை செய்யும் சட்டமூலம் குற்றவியல் சட்டத்தில் சேர்க்கப்படவுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் வெசாக் பௌர்ணமி உற்சவம் முடிவடைந்த பின்னர், நாடாளுமன்றத்தை கலைத்து, தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-11)

## அமைச்சர்கள்...

லங்கா சுதந்திர கட்சி தலைவர்களிடம் முறைப்படி அறிவிக்கப்படவுள்ளது.

குறித்த அமைச்சர்களுக்கு வாக்களித்தவர்களிடமிருந்து ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு காரணமாக இராஜினாமா செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர்களுக்கு தங்கள் மாவட்டங்களுக்கு செல்ல முடியாத் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## ஜனாதிபதி நாளை...

உள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய உள்ளதுடன் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார்.

ஜனாதிபதி தனது இந்த விஜயத்தின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி மாமூன் ஹுசைனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அத்துடன் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது, இரண்டு நாடுகளுக்கு இடையில் சில புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கையெழுத்திடப்பட உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை, பாதுகாப்பு உட்பட பல துறைகளில பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவுகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## புலிகளிடம்...

ரஷ்ய நாட்டில் இலங்கைத் தூதுவராக கடமையாற்றிய உதயங்க வீரதுங்கவை காணவில்லை. அவரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவருக்கு எதிராக உக்ரேன் நாட்டு அரசு எமக்கு முறைப்பாடுகளை செய்துள்ளது.

உக்ரேன் தீவிரவாதிகளுக்கு ஆயுத விற்பனையில் ஈடுபட்டார் என்பதே அந்த முறைப்பாடாகும். எனவே அவரை தேடி வருகிறோம்.

இதேபோன்று கடந்த ஆட்சிக் காலத்தில் ஆயுத வியாபாரம் மும்முரமாக இடம்பெற்றுள்ளமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளன. விடுதலைப் புலிகளிடமிருந்து யுத்தத்தின் ஆரம்பக்கட்டத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக தரவுகள் உள்ளன.

ஆனால் புலிகளிடமிருந்து இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் அவ் ஆயுதங்கள் தொடர்பாக எவ்விதமான தரவுகளோ அறிக்கைகளோ கிடையாது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை உக்ரேன் தீவிரவாதிகளுக்கு மட்டுமல்ல நைஜீரியாவில் பொகோஹராம் தீவிரவாதிகளுக்கும் விற்பனை செய்யப்பட்ட தகவல்கள் கிடைத்துள்ளன.

அது மட்டுமல்லாது நடுக்கடலில் கப்பல்களிலும் ஆயுத விற்பனை இடம்பெற்றுள்ளது. அத்தோடு தனியார் நிறுவனங்களுக்கும் ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதற்கும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் தொடர்புகள் உள்ளது.

புலிகளிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்களே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்திற்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட ஆயுதங்கள் அரசின் ஆயுதங்கள் அல்ல புலிகளின் ஆயுதங்களேயாகும். இவ்விடயம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. (எ-11)

# இளவாலையில் மனைவி தற்கொலை

## பொலிஸ் காவலில் இருந்த கணவர் போத்தலால் தாக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தனது மனைவி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்பதைக் கேள்வியுற்ற, பொலிஸ் காவலில் இருந்த கணவர் அங்கிருந்த போத்தலை உடைத்து தன்னை தானே குத்தி உயிரை மாய்க்க முற்பட்டுள்ளார். இந்த சம்பவம் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் இளவாலை, பிரான்பற்றைச் சேர்ந்த பெண்ணுக்கும் வவுனியா நெழுக்குளத்தைச் சேர்ந்தவருக்கும் திருமணம் நடைபெற்று இருவரும் இளவாலைப் பகுதியில் வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் மனைவியின் நகையை அடைவு வைத்தமை தொடர்பில் மாமியாருக்கும் மருமகனுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மாமியார் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய மருமகன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து குறித்த நபரின் மனைவி நேற்றுக் காலை தூக்கிட்டு மரணம் அடைந்துள்ளார். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மருமகனுக்கு அவரது மனைவி இறந்துவிட்டார் என்பதை மாமியார் தெரிவிக்கவே அவர் தன்னைத்தானே போத்தலால் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த குறித்த நபர் ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (எ-11)

# ஜனாதிபதியின் அதிகாரம் 90 வீதத்தால் குறையும்

பாராளுமன்றத்தில் அடுத்த வாரத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசியலமைப்புத் திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் 90 வீதம் குறைக்கப்படும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்த லக்ஷ்மன் கிரியெல்ல, தமது அதிகாரங்களைக் கைவிட விரும்பும் ஒரேயொரு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் எனவும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டால் வெள்ளிக் கிழமையில் இருந்து அவரது அதிகாரம் 90 வீதத்தால் குறைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (எ-11)


### வலம்்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

### வீடு வாடகைக்கு உண்டு

எல்லா வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு உண்டு. ஸ்தாபனங்களுக்கும், மெடிக்கல் கிளினிக் நடத்துவதற்கும் உகந்தது.

தொடர்பு:-0753408577

(9969)

### O/L உடன் | UK, Australia, NZ, Canada & Malaysia

உயர்தரம் முடித்து பல்கலை போகமுன் பட்டம் முடித்து வேலை பெறுங்கள்!

இலங்கையில் உயர்தரம் முடித்து பல்கலைக்கழகம் செல்லும் காலத்துக்குள், விரும்பிய நாட்டில் - விரும்பிய துறையில் பட்டம் பெற்று - தொழில்வாய்ப்புடன் நிரந்தரமாக குடியேறும் அரிய வாய்ப்பு

(சி-558)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| 2017 | உயர்தரப் பரீட்சை | பல்கலை இரண்டாம் வருடம் |
| 2019 | பல்கலை நுழைவு | பட்டம் நிறைவுசெய்து தொழில்வாய்ப்பு |
| 2022 | பட்டம் நிறைவு | 3 வருடம் தொழில் செய்து வருமானத்துடன் பட்ட மேற்படிப்பு |

முன்னணி பல்கலைக்கழகங்கள் & கல்லூரிகள். 15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை அனுபவமுள்ள நிபுணர்கள், அரச அங்கீகாரம்பெற்ற குடிவரவு முகவர்கள் மூலம்

பல்கலைக்கழக அனுமதி - தொழில்வாய்ப்பு - குடியுரிமை

அனைத்து ஏற்பாடுகளையும் நாமே செய்து தரும் 100% உத்தரவாதமான சேவை!

Student Visa - Spouse Visa - Super Visa - Visit Visa

FREE Assessment | ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள www.sikaram.lk

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

Sikaram (Pvt) Ltd.

No.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்) யாழ் பஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றர்

Tel: 0777 32 4004, 021 222 00 11

### வேலையாள் தேவை

லலிதா நகையகத்திற்கு O/L தகைமையுடைய ஆண்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-554)

### புலமைப் பரிசில்-2015 (மாதிரிப் பரீட்சை)

ஞானோதயம் | வெளியீடுகள் | புலமைச்சிட்டு

- ஒவ்வொரு ஞாயிறும் பரீட்சை
- மாணவர்களின் வசதி கருதி பரீட்சை -6 நேரங்களில்
- வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

அடுத்த பரீட்சை 05.04.2015

மேலதிக விபரங்களுக்கு

புதிய நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.நகர்

தொடர்பு:-0774598440

(சி-559)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org